ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 05 | 11 - 24 யூன் 2019 | முழக்கம் 101

ஓம் விஸ்வப் பிரமனே நம
பாரிஸ் லா சப்பலில்
ESANE JEWELLRY
தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் இணைபவர்களுக்கு முதல் மாதம் இலவசம்!
8, Rue Cail,75010 Paris Tel: 01 42 81 18 03
email: esanejewellery@gmail.com Port: 06 66 09 55 11

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



## 'அயல் நாட்டவருக்கு முன்னுரிமை'

### சிறீலங்காவில் இருந்து திரும்பிய மோடி சீனத் தலைவரையும் சந்திக்க முடிவு

## இலங்கைத் தீவில் 3ம் நிலைக்கு தள்ளப்படும் தமிழினம்

## அடம்பன் கொடியோடு புடலங்காய் கொடி திரண்டால்...

## விண்வெளிப் போருக்கு ரஷ்யா தயாராகின்றதா?

## கோத்தபாய களமிறக்கிய ஆட்டநாயகர்

## முன்னாள் போராளிகள் மீது பழிபோடும் திட்டத்துடன் வவுணதீவில் சிறீலங்காக் காவல்துறையினர் கொலைகள்

### எப்படி கொன்றோம் என விளக்கிய சஹ்ரானின் சகாக்கள்!

உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
Bondyயில் புத்தம் புது வீடு விற்பனைக்கு
✓45m² அளவு கொண்ட F2 வீடு
✓மார்ச் மாதம் குடியமரக்கூடியது
✓விலை. 179 000€
110% கடன்
எந்தவித முதலீடும் இன்றி 110% வீதக் கடன் செய்து தரப்படும்
Gare de Bondyயில் இருந்து 1 நிமிட நடைதூரத்தில்
தொடர்பு: சுதன் 07 64 08 93 83

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Mohan Jewellery Mart
3/4 Fois sans Frais
(Pièce d'identité + Rib + C.B)
பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
Mo: La Chapelle ou Gare du Nord
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

OM MURUGA DESIGN & PRINT
+33 1 71 93 34 32
Info@omprint.fr
7 1 Rue Louis Blanc 75010 Paris
NEW
Ria MONEY TRANSFER
OM MURUGA
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல் பணம் அனுப்பிக் கொள்ளலாம்
VISA | VISA Electron | EUROCARD MasterCard | Maestro

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04


தமிழர் திருமண மண்டபம்
Palais de La Terrasse
100 முதல் 600 இருக்கைகள்
Aulnay sous bois, Goussainville, Villers le bel, Fosses, Louvres, Les Noues, Sarcelles, Saint denis, Bondy, Bobigny, Drancy, La Courneuve, Le Blanc Mesnilல் இருந்து 15 நிமிடத்திலும், Le Bourgetல் இருந்து 6 நிமிடத்திலும் மண்டபத்துக்கு செல்ல முடியும்.
Le Bourgetல் இருந்து 9 இருக்கைகள் கொண்ட போக்குவரத்துச் சேவை இலவசம்!
29 avenue louis de broglie
95500 le thillay
facebook: Salle Laterrasse Le Thillay
Palais de l'épi d'Or
Salle - 1
100 முதல் 300 இருக்கைகள்
Salle - 2
100 முதல் 400 இருக்கைகள்
3, Avenue de l'épi d'Or
94800 Villejuif
facebook: salle de l'épi d'or
Métro: 7 ( Arrêt: Porte d'italie)
Bus: 131 ( Arrêt: Youri Gagarine)
தொடர்புகளுக்கு:
06 12 65 73 53 / 06 51 79 74 32 / 06 95 61 39 43


மாங்கல்யம்
நகை மாடம்
தரம் - நேர்மை - விலை - டிசைன் - உத்தரவாதம்
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com


கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30


S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42


குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்
நடாத்தும்
17வது தூய ஒளி
வெற்றிக்கிண்ணத்துக்கான
உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி
1986 ஆனி 10 மண்டைதீவுக் கடலில் மரணித்த
எம் 31 உறவுகளின் நினைவாக நடாத்தப்படுகின்றது.
பிரதம விருந்தினர்
சிறப்பு விருந்தினர்கள்
காலம் :
16-06-2019 ஞாயிறு காலை 9.00 மணி
இடம்:
STADE PERSHING (வன்சன் மைதானம்)
Route Bosquet Mortemart - 75012 Paris
தொடர்புகளுக்கு :
தலைவர் : (ஐ. சந்திரன்) - 06 27 77 18 11
செயலாளர் : (ஜே. நியூமன்) - 07 66 03 08 54
விளையாட்டுத் தலைவர் (ஜே. றஸ்கின்) : 07 83 24 21 42


Baby Baloon
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23


பரிஸ் லாச்சப்பலில்
NEW SUTHA COIFFURE
நியூ சுதா சலூன்
10 Rue Demarguay
75010 Paris.
Gare du Nord
Sutha
Tél: 06 51 91 67 72


எப்பிநே சூர் ரெசன்னில் RER முன்பாக
NEW SUJAN COIFFURE
5 rue d'orgemont
93800 Epinay sur seine
RER C T8 11 :Epinay sur seine
Tél.: 07 53 54 27 73


சாரி பிளவுஸ்
30 நிமிடங்களில்
தைத்துத் தரப்படும்
Devi Textile & Tailors
ஆண் பெண்
சிறுபாலருக்கும்
அனைத்து விதமான ஆடைகளும்
மற்றும் உங்கள் வசதிக்கு
அமைவான தோல்பைகளும்
உங்கள் எண்ணத்திற்கேற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
Tél: 09 51 01 85 59
Suresh: 07 81 29 86 50
29, Bld de la Chapelle
75010 Paris
M°: La Chapelle (ligne 2)

ஈழமுரசு
mediacentre ஊடகமையம்
முரசு 05 11 – 24 யூன் 2019 முழக்கம் 101

“தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும் - கல்விகற்கும் உரிமைக்கும் இடையில், நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை.”

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# ‘அயல் நாட்டவருக்கு முன்னுரிமை’

# சிறீலங்காவில் இருந்து திரும்பிய மோடி சீனத் தலைவரையும் சந்திக்க முடிவு

(11.06.2019, செவ்வாய்க்கிழமை)

மீண்டும் இரண்டாவது தடவையாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்றுக்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி மாலைதீவிற்கும், சிறீலங்காவிற்கும் சென்று திரும்பியுள்ளார். ‘அயல் நாட்டவருக்கு முன்னுரிமை’ என்ற கொள்கையின் அடிப்படையில், தான் சிறீலங்கா மற்றும் மாலைதீவுகளுக்கு பயணம் மேற்கொள்வதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக, கடந்த 8ம் திகதி சனிக்கிழமை தன் இரண்டாவது பதவிக் காலத்தில் முதல் வெளிநாட்டுப் பயணமாக மாலைதீவிற்குச் சென்றிருந்தார். அந்நாட்டுப் நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியுள்ளார். அதைத் தொடர்ந்து, பிரதமர் மோடி – மாலைதீவு ஜனாதிபதி இப்ரஹீம் சோலி இருதரப்பு உறவுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். அத்துடன் மோடிக்கு மாலைத்தீவு அரசின் உயரிய விருதை அந்த நாட்டின் ஜனாதிபதி வழங்கினார்.

அத்துடன் இந்தப் பயணத்தின்போது இந்தியா – மாலைத்தீவுகள் இடையே பாதுகாப்பு, சுகாதாரம் உட்பட 6 துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. நீர் நிலைகள், சுகாதாரம், கடல் மார்க்கமாக பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து தொடர்பாக 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. பின்னர், சுங்கத்துறையின் திறனை மேம்படுத்தும் வகையில் மத்திய மறைமுக வரிகள் வாரியம்–இந்திய சுங்கத்துறை – மாலைத்தீவுகள் சுங்கத் துறை இடையேயான ஒத்துழைப்பை ஏற்படுத்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், மாலைத்தீவு குடிமைப் பணி அதிகாரிகளுக்கான பயிற்சியளிக்கவும், அவர்களின் திறனை வளர்க்கவும் இந்தியாவின் நிர்வாகத்துக்கான தேசிய மையம் –மாலைத்தீவுகளின் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்க்கும் துறை, மாலைத்தீவுகளின் குடிமைப் பணிகள் ஆணையம் ஆகியவை இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்புத் துறை சாராத கப்பல் போக்குவரத்து தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை பகிர்ந்துகொள்ள இந்திய கடற்படை–மாலைத்தீவுகளின் தேசிய பாதுகாப்புப் படை இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மாலைதீவுப் பயணத்தை முடித்துக்கொண்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மதியம் சிறீலங்கா சென்றிருந்தார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட சில அமைச்சர்கள் விமான நிலையம் சென்று வரவேற்பளித்தனர். அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்தை நோக்கி புறப்பட்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செல்லும் வழியில் கடந்த ஏப்ரல் மாதம் 21ம் திகதி தற்கொலை குண்டுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தையும் பார்வையிட்டதுடன் வழிபாடுகளிலும் ஈடுபட்டார். அத்துடன் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை மற்றும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் சந்தித்துத்து தனது கவலையையும் இரங்கலையும் தெரிவித்தார். அத்துடன், ‘கோழைத்தனமான தீவிரவாத தாக்குதல்களால் சிறீலங்காவை ஒன்றும் செய்துவிடமுடியாது. சிறீலங்கா மீண்டெழும்பும். அதற்கு இந்தியா துணை நிற்கும்’ இவ்வாறு கொச்சிக்கடை தேவாலயத்தை பார்வையிட்ட பின்னர் தனது ட்விட்டரில் இந்திய பிரதமர் மோடி பதிவிட்டார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, ஜனாதிபதி செயலக வளாகத்திற்குள் இந்தியப் பிரதமர் மோடி பிரவேசித்த வேளை மழை பெய்தமையினால் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவரை கறுப்புக் குடை பிடித்து வரவேற்பளித்து பாதுகாப்பாக செயலகத்திற்குள் அழைத்துச் சென்றார்.

தொடர்ச்சி 04ம் பக்கம்












# ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**



MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com



**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

**Impression:**
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard



**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com



**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.



**Bail விற்பனைக்கு!**
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும்
**Restaurant Bail**
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
நகுலன்: 0663643500


# 'அயல் நாட்டவருக்கு....

இதன் பின்னர் அவருக்கு இராணுவ வேட்டுக்களுடன் இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது, அதன் பின்னர் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோர் வரவேற்பளித்தனர். அத்துடன் பிரதமர் நரேந்திர மோடி தமது வருகையை நினைவுகூறும் வகையில் ஜனாதிபதி செயலக வளாகத்தினுள் மரக்கன்று ஒன்றினையும் நாட்டி வைத்துள்ளார். மதிய விருந்தின் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தினர்.

அத்துடன், சிறீலங்கா எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவுடனும் மோடி பேச்சுக்களை நடத்தினார். இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, நாமல் ராஜபக்ச மற்றும் பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சிறீலங்காவிற்கான இந்நிய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங்சந்து உட்பட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சிறீலங்காவின் முன்னேற்றத்திற்கு இந்தியா அயல்நாடு என்ற ரீதியில் தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். வரலாற்று ரீதியில் இரு நாடுகளுக்கிடையில் அரசியலுக்கும் அப்பாற்பட்டு காணப்படும் நல்லுறவு எதிர்காலத்திலும் வலுப்பெற வேண்டும் என இதன்போது மோடியிடம் மகிந்த கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் மோடி சந்தித்துப்



பேசியுள்ளார். இதன்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கல நாதன், த.சித்தார்த்தன் ஆகியோர் சந்தித்தனர்.

சுமார் நான்கு மணி நேரமே சிறீலங்காவில் தங்கியிருந்த மோடி, அங்கிருந்து ஆந்திர மாநிலத்தில் உள்ள ரேனிகுண்டா விமான நிலையத்துக்கு சென்று ஞாயிறு மாலை திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுவிட்டு டில்லிக்கு திரும்பியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவிற்கும் சிறீலங்காவிற்குமான கூட்டு அச்சுறுத்தலாகவே பயங்கரவாதம் காணப்படுகின்றது. அந்த சவாலை ஒன்றிணைந்து எதிர்க்கொள்ள உறுதிப்பூணுவோம் என தெரிவித்துள்ள இந்திய பிரதமர் மோடி, பாரத இதயத்தில் சிறீலங்காவிற்கு என்றும் சிறப்பிடம் உண்டு. குறுகிய பயணம் என்றாலும் மிகவும் பலனுள்ளதாகவே அமைந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கைப் பயணம் தொடர்பில் மோடி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கைக்கு மீண்டும் வர கிடைத்ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். எனது இந்தப் பயணம் இந்த அழகான தீவிற்கான மூன்றாவது பயணமாக அமைந்துள்ளது. உதவி – ஒத்துழைப்புகள் சிறீலங்காவிற்கு தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை வழங்க இந்தியா ஒருபோதும் மறந்ததில்லை. நண்பனின் தேவையை மறந்து செயற்பட்டதில்லை.

சரியாக 10 நாட்களுக்கு பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் சந்தித்துள்ளேன். பயங்கரவாதம் சிறீலங்காவிற்கும் – இந்தியாவிற்கும் கூட்டு அச்சுறுத்தல் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறசேனவும் நானும் ஒப்புக்கொண்டுள்ளோம். எனவே ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. எனவே பாதுகாப்பானதும் வளமானதுமான எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயற்பட உறுதிப்பூண்டுள்ளோம்.

மிக விரைவில் இலங்கை மீள செயற்பட்டு அபிவிருத்தி இலக்குகளை அடையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. பயங்கரவாதத்தின் கொடூரமான செயல்களினால் இலங்கையின் எழுச்சியை தோல்வியடையச் செய்ய இயலாது. இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தனது மாலத்தீவு பயணத்திற்கு முன் பிரதமர் மோடி வெளியிட்ட செய்தியில், மாலைத்தீவு மற்றும் சிறீலங்காவிற்கு மேற்கொள்ளும் பயணம், அந்த நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவை மேம்படுத்திக்கொள்ள உதவும் என நம்புவதாக குறிப்பிட்டிருந்தார். இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களிடையேயான நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பிரதமர் மோடி மாலைத்தீவுகளுக்கு பயணம் மேற்கொண்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்விரு நாடுகளுக்குமான பயணத்தை முடித்துக்கொண்டுள்ள மோடி, கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் அடுத்த வாரம் நடைபெற உள்ள ஷொங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டின்போது, சீன அதிபர் ஷி ஜின்பிங்கையும் சந்தித்துப் பேச உள்ளார். இதனை சீனாவுக்கான இந்தியத் தூதர் விக்ரம் மிஸ்ரி உறுதிப்படுத்தியுள்ளார். சீனாவின் வூஹான் நகரில் பிரதமர் நரேந்திர மோடிக்கும், அதிபர் ஷி ஜின்பிங்குக்கும் இடையே கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற அதிகாரப்பூர்வமற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்தது. இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர், பிரதமர் மோடியும் அதிபர் ஷி ஜின்பிங்கும் பல்வேறு கூட்டங்களின் நடுவே கடந்த ஆண்டில் மட்டும் 4 முறை சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்நிலையில், ஷொங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங்கை சந்தித்துப் பேச இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவில் வர்த்தகம் முக்கியப் பங்கை வகித்து வருகிறது என்றும் மிஸ்ரி மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகள் மீதான தடை தீர்ப்பாயம் அமைத்தது இந்தியா

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்ட நிலையில், இந்த தடை தொடர வேண்டுமா? என தீர்மானிப்பதற்காக நீதிபதி தலைமையில் இந்திய மத்திய அரசு ஒரு தீர்ப்பாயத்தை அமைத்துள்ளது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி 1991ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மத்திய அரசு தடை செய்தது. இந்தத் தடை ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் நீடிக்கப்பட்டு வந்தது. அண்மையில் இந்தத் தடை மீண்டும் ஒரு முறை நீடிக்கப்பட்டது.



இந்நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையை தொடர போதுமான காரணங்கள் இருக்கிறதா? இல்லையா? என்பது பற்றி தீர்மானிக்க ஒரு தீர்ப்பாயத்தை மத்திய உள்துறை அமைச்சகம் நியமித்துள்ளது. இதற்காக டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி சங்கீதா திங்ரா ே'கல் தலைமையில் சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய தாளத்திற்கே ஆடுவோம் தமிழரசுக் கட்சியின் தீர்மானம்!

இந்தியாவின் நிலைப்பாட்டையும் அறிந்தே எமது முடிவுகளும், தீர்மானங்களும் எடுக்கப்படும். அவை எமது கட்சியின் மாநாட்டில் எதிரொலிக்கும் என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா. இந்தியாவிற்கு செல்வதற்கு முன்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.



தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மாவை சோ.சேனாதிராஜா சந்தித்தித்தார். இந்தச் சந்திப்பு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது– ஏப்ரல் மாதம் 21ம் திகதி நடந்த குண்டு வெடிப்புக்களால் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த முடியாத நிலமை ஏற்பட்டது. குண்டு வெடிப்பின்போதும், அதன்பின்னரும் அதிகம் பாதிக்கப்படுவது தமிழ் மக்களாகவே உள்ளனர். நாட்டின் நிலமை கருதி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மாநாட்டை நடத்த வேண்டியுள்ளது.

ஐ.நா. தீர்மானத்தை ஏற்க மாட்டோம் என்று அரசு கூறியிருந்தது. இப்போது குண்டு வெடிப்புக்களை அடுத்து பன்னாடுகளின் தலையீடுகள் தானாகவே ஆரம்பித்து விட்டன. பல நாடுகளின் உளவுப் பிரிவுகளும் நாட்டுக்குள் நுழைந்துள்ளன. அந்த நாடுகளில் இந்தியாவும் முக்கியமானது. இலங்கைக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்தபோது இந்திய அரசு தமக்குரிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதிச் செயற்பட்டனர். அதேவேளை இந்தியாவில் மீண்டும் தலைமை அமைச்சராக மோடி பதவியேற்றுள்ளார். அவரைச் சந்திப்பதற்கும் முயற்சி எடுக்கின்றோம்.

இலங்கைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்தபோது இந்திய அரசு அது தனக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலாகவே கருதிச் செயல்பட்டனர். இவற்றின் அடிப்படையில் இந்தியாவின் எண்ணத்தை அறிய வேண்டியுள்ளது. இந்த அரசின் முன் நகர்த்த வேண்டிய தீர்மானங்கள், பன்னாடுகளின் முன்நகர்த்த வேண்டிய தீர்மானங்கள், இந்தியாவின் முன்நகர்த்த வேண்டிய தீர்மானங்கள் என்று அனைத்தும் தனித்தனியே ஆராயப்படும் என்றார்.



இதேவேளை, கடந்த 6ம் திகதி சென்னை அண்ணா அறிவாலய கழக அலுவலகத்தில் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார். குறித்த சந்திப்பில் தி.மு.க சட்டத்தரணி இராதாகிருஷ்ணனும் கலந்துகொண்டார். கடந்த தேர்தலில் தி.மு.க பெற்ற வெற்றிக்கு வாழ்த்தினைத்தெரிவித்த மாவை, இலங்கை அரசியல் நிலைமைகள் குறித்து விளக்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

ஈழமுரசு

# மீண்டும் நிரூபிக்கப்பட்ட சிறீலங்காவின் அதிகாரம்

சிறீலங்காவின் ஆட்சியில் பேரினவாதம் கொண்ட அரசியல் தலைவர்கள் வீற்றிருந்தாலும் அந்நாட்டில் முடிவெடுக்கும், ஆட்டிப்படைக்கும் அதிகாரம் படைத்த சக்திகளாக எப்போதும் பௌத்த பேரினவாதப் பிக்குகளே இருக்கின்றார்கள் என்பது மீண்டும் ஒருமுறை மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

1959ம் ஆண்டு சிறீலங்காவின் பிரதமர் பதவியில் இருந்த சொலமன் வெஸ்ட் ரிச்சர்ட் டயஸ் பண்டாரநாயக்க, தனது அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது அங்கு வந்த ஞானசார பௌத்த பிக்குவால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். தங்கள் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படும் அதிகாரம் கொண்டவர்களின் உயிரையும் எடுக்கத் தயங்கமாட்டோம் என்பதை இதன் மூலம் உலகிற்கு காண்பித்தனர் பௌத்த பிக்குகள்.

தமிழர்களுக்கு சாதகமாக எதாவது நடந்துவிடும் என்ற நிலைமைகள் தோற்றம்பெறும் போதெல்லாம் தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அதனை அடக்குவதில் இந்தப் பௌத்த பிக்குகள் எப்போதும் பின்நிற்பதில்லை.

1950களில் தமிழைப் புறக்கணித்து தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தவர் பண்டாரநாயக்க. இதனால் எழுந்த நெருக்கடிகளைச் சமாளிக்க செல்வநாயகத்துடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். ஆனால், பண்டா - செல்வா உடன்படிக்கைக்கு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் பௌத்த பிக்குகள் எதிர்ப்புத் தெரிவித்து போராடியதையடுத்து இறுதியில் அதனைக் கிழித்தெறிந்தார். இதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களை விடப் பலம்பொருந்தியவர்கள் பௌத்த பிக்குகள் என்ற தோற்றப்பாடு மட்டுமல்ல, அதுதான் உண்மை என்ற நிலைமையும் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டுவிட்டது.

பௌத்த பிக்குகளின் விருப்பத்தை மீறிச் செயற்படுவதென்பது தற்கொலைக்கு சமமானது என்பதும் பண்டாரநாயக்கவிற்கு ஏற்பட்ட நிலையையே தங்களுக்கும் ஏற்படுத்தும் என்பதும் இன்று சிங்கள ஆட்சியில் அமரும் ஒவ்வொரு தலைவர்களுக்கும் நன்றாகத் தெரியும். இதனால் தான் வெற்றிபெற்றதன் பின் பௌத்த மதத் தலைவர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றே ஆட்சியில் அமர்கின்றார்கள். 'ஆட்சி தங்கள் கையில், அதிகாரம் அவர்கள் கையில்' என்ற நிலையில்தான் சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் நிலைமை இருக்கின்றது. இந்த உண்மை கடந்த வாரம் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.





கடந்த ஏப்ரல் 21ம் திகதி உயிர்த்த ஞாயிறு இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னர், முஸ்லீம்கள் பக்கம் திரும்பியிருக்கும் கொடூரப் பார்வையைத் தமக்குச் சாதமாக்கி, அதிகாரம் கொண்ட முஸ்லீம் தலைமைகளைக் கட்டுப்படுத்த பௌத்த பேரினவாதம் முயன்றுள்ளது.

கடந்த வாரம் கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக பௌத்த பிக்குவான நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர், சிறீலங்காவின் அமைச்சர் ரிஷாத் பதியூதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஷ்புல்லாஹ், மேல்மாகாண ஆளுநர் அசாத்சாலி ஆகியோரை பதவி விலகுமாறு வலியுறுத்தி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தார். அவர் சாகும் வரை சிறீலங்காவின் எந்தவொரு அரசியல் தலைவரும் விட்டு விடப்போவதில்லை என்பது உலகறிந்த உண்மை.

இதற்குள், அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டத்திற்கு 24 மணித்தியாலத்திற்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்திய பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர், இந்த விடயத்தில் அரசாங்கம் ஒருதலைப் பட்சமாக செயற்பட்டால் நாடு தழுவிய ரீதியில் பௌத்த பிக்குகள் பெரும் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என கடுமையாக எச்சரித்தார். அத்துடன், இஸ்லாமிய அடிப்படைவாதத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல்வாதிகள் தலையிடத் தேவையில்லை. மதத் தலைவர்களால் தீர்த்து வைக்க முடியும் என்றும் கலகொடஅத்தே ஞானசார தேரர் சிறீலங்கா அரசியல் தலைவர்களுக்கும் அறிவித்தார்.

இவ்வாறு கடும்போக்கு பௌத்த மதவாதத் தலைவர்கள் ஓரணியில் இணைந்து அச்சுறுத்தல்களையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தத் தொடங்கிய நிலையில், அந்த மூவரும் தங்கள் பதவிகளில் இருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனைச் சாதமாக்கி அரசியல் இலாபம் தேட முனைந்த ஏனைய முஸ்லீம் தலைவர்கள் தாங்களும் பதவி விலகுவதாக அறிவித்தனர்.

பௌத்த பிக்குகளின் இந்த எச்சரிக்கையை கட்டுப்படுத்தி, முஸ்லீம் தலைமைகள் பதவி விலகுவதை தடுக்கும் சக்தியற்ற சிறீலங்காவின் ஆட்சியாளர்கள், பௌத்த பிக்குகளிடமே அதிகாரம் இருக்கின்றது என்பதை இதன்மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அதிகாரம் பௌத்த பேரினவாத மதத் தலைவர்களிடம் இருக்கும்போது, நீதியை சிங்கள அரசியல் தலைவர்களிடம் எதிர்பார்த்து காத்திருப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனமான செயல். சிறீலங்கா ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கு நீதியைத் தரமுடியாது. பௌத்த மதத் தலைவர்களிடம் இருந்து தமிழ் மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளமுடியாது. சர்வதேசத்தின் தலையீடின்றி என்றுமே தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்துவிடப் போவதில்லை என்பதைத்தான் சிறீலங்காவின் ஆட்சியும் - அதிகார பலமும் சொல்லிநிற்கின்றது.

# முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் இந்திய இந்துத்துவ அமைப்பு

## எச்சரிக்கை விடுக்கின்றது மே பதினேழு இயக்கம்

சங்கிலி மன்னனின் 400வது ஆண்டு விழாக் குழு விடுத்த அழைப்பின் பெயரில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட தமிழக இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் உள்ளிட்டவர்கள் முல்லைத்தீவு உட்பட தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார்கள்.

பா.ஜ.க. உயர்மட்ட குழு உறுப்பினர்களான அருண் உபாதெயாய, தீட்சாக்கௌசிக் மற்றும் தமிழக இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏழு பேர் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். இதன்போது இறுதிப்போரில் உயிரிழந்த மக்கள் நினைவான முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு கடந்த 26ம் திகதி சென்று போரில் உயிரிழந்த மக்களுக்காக வணக்கம் செலுத்தியதுடன் வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்கள்.



இந்நிலையில், தமிழீழத்தினை சிதைத்திட களமிறங்கியிருக்கும் இந்துத்துவக் குழுக்கள் குறித்து தமிழர்கள் எச்சரிக்கை அடைய வேண்டும் என ஈழத் தமிழர்களுக்காக தொடர்ந்து குரலெழுப்பி வரும் மே பதினேழு இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, சங்கிலிய மன்னனின் 400வது ஆண்டு விழாவின் வாயிலாக ஈழத் தமிழர்களை மத ரீதியாக பிளவுபடுத்தும் சதியில் இந்தியாவைச் சேர்ந்த இந்துத்துவ அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. போர் முடிந்து விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு பின்னரான காலக்கட்டத்தில், ஈழத்தமிழர்களின் ஒற்றுமையை சீர்குலைக்க இந்தியாவிலிருந்து விஷ்வ ஹிந்து பரி'த், சிவசேனா போன்ற அமைப்புகள் ஈழத்தில் களமிறங்க ஆரம்பித்தன.

இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த அர்ஜுன் சம்பத் சிவசேனாவின் வழியாக ஈழத்தில் இந்துத்துவ மதவெறிக் கோட்பாடுகளை பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். இந்துத்துவ அமைப்புகளைச் சேர்ந்த பலரும், இந்திய தூதரக அதிகாரிகளும் இணைந்து இந்த சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினூடாக தமிழர்கள் மத்தியில் களைந்தெறியப்பட்ட சாதி, மத வேறுபாடுகளை மீள் உருவாக்கம் செய்யும் பணிகளில் இந்துத்துவ அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

70 ஆண்டுகாலமாக நீண்ட நெடிய விடுதலைப்

தொடர்ச்சி 12ம் பக்கம்

## புத்தரின் பாதை புரியாத பிக்குகள்

தம்மை கொல்ல வந்த தேவதத்தருக்குக்கூட விகாரையை புத்தபெருமான் தடை செய்யவில்லை. அந்த உன்னதமான பாதையை புரியாத முட்டாள் தேரர்கள் துன்பத்திலிருந்து நீங்கி சுகம் பெறட்டும். கவலையிலிருந்து நீங்கட்டும்



என்று சிறீலங்கா அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கம்பஹா மாவட்ட விகாரைகளில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர மற்றும் சதுர சேனாரத்ன ஆகியோர் நிகழ்வுகளில் கலந்துகொள்ளக்கூடாதென கம்பஹா மாவட்ட சங்க சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் மங்கள சமரவீர இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரப் பட்டறைகளுக்குத் தடை

மரப் பட்டறைகளுக்கும், மர அறுவைக் கருவிகளின் இறக்குமதிக்கும் சிறீலங்கா அரசு 5 ஆண்டுகள் தடை விதிக்க முடிவு செய்துள்ளது. வனப்பகுதிகளைப் பாதுகாப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சிறீலங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அதிபர் மைத்ரிபால சிறீசேனா கூறுகையில், மரப் பட்டறைகளில் பயன்படுத்தப்படும் கருவிகளின் இறக்குமதிக்கு வரும் வாரத்திலிருந்து தடை விதிக்கப்படும் என்றார். சட்டவிரோத மரக் கடத்தல் காரணமாக இலங்கையின் வனப் பகுதிகள் சுருங்கி வருவதாகவும், எனவே அதுபோன்ற குற்றங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் கொழும்பில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மாநாட்டில் உறுதியளித்தார். அதன் அடிப்படையிலேயே தற்போது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கு மகிந்த தரப்பு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

## சிறீலங்காவிற்கு உலக வங்கி எச்சரிக்கை!

சிறீலங்கா அரசியல் நிலை மாற்றங்களினால் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்படலாம் என உலக வங்கி எச்சரித்துள்ளது. இலங்கையில் ஏற்பட்ட அசாதாரணமான சம்பவங்களினால் முதலீடு செய்வதில் ஆர்வம் குறையலாம் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது. அத்தோடு எதிர்வரும் சிறீலங்கா ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு முன்பு நாட்டின் அரசியல் தன்மை நம்பிக்கையற்ற விதமாக காணப்படுவதாக உலக வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி 1 :-** இதுவரை காலத்தில் தமிழ் மக்களை மிகமோசமாக ஏமாற்றிய ஓர் அரசாங்கத் தலைவராக மைத்திரிபால சிறிசேனவுள்ளதாக சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

**செய்தி 2 :-** கொடுத்த வாக்குறுதிகளை மறந்து தமிழர்களுக்கு துரோகம் செய்து விட்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேனா என ரணிலுடன் யாழில் நடந்த கூட்டத்தில் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** பௌத்த, சிங்களப் பேரினவாதத் திமிர் குறித்த அரசியல் பட்டறிவு கொஞ்சம் கூட இல்லாமல்தான் கூட்டமைப்பில் உள்ளவர்கள் இன்னும் இருக்கின்றார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** தமிழரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்துக்கு முன்னால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



**எழும் கேள்வி:-** இப்படியொரு கட்சி தமிழருக்குத் தேவையா..?

★★★★ ★★★★

**செய்தி:-** பொய்ச் செய்தியை வெளியிட்டால் 5 வருட சிறை வழங்கும் சட்டத்திற்கு சிறீலங்கா அமைச்சரவை அனுமதி வழங்கியது.

**எழும் கேள்வி:-** அரச ஊடகங்களில் பணியாற்றுபவர்கள் எல்லோரும் சிறைக்கு செல்லவேண்டிய நிலை வரப் போகின்றதே..?

★★★★ ★★★★

**செய்தி:-** *2005ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருந்தால் இன்று எமது அனைத்து உறவுகளும் உயிரோடு இருந்திருப்பார்கள் என கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.*

**எழும் கேள்வி:-** *தமிழர்கள் எல்லோரும் பௌத்த, சிங்களவர்களாக மாறி உயிரோடு இருந்திருப்பார்களோ..?*

★★★★ ★★★★

**செய்தி:-** *தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தமை நாம்விட்ட பெரும் தவறாகும். இதை இப்போதே நாம் உணருகின்றோம் என சிங்கள கடும்போக்கு மதவாத சக்தியாக பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.*

**எழும் கேள்வி:-** *ஞானசார தேரருக்கு கண்கெட்ட பிறகுதான் ஞானம் பிறக்குமோ..?*

★★★★ ★★★★

**செய்தி:-** *முஸ்லிம் மக்கள் பயங்கரவாதிகளை காட்டிக் கொடுத்தார்கள். அவர்கள் பயங்கரவாதத்தை விரும்பவில்லை. ஆனால் 1983 இலிருந்து தமிழ் மக்கள் புலிகள் யாரையும் காட்டிக் கொடுத்தார்களா? என சிறீலங்காவின் பிரதியமைச்சர் நளின் பண்டார நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.*

**எழும் கேள்வி:-** *விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கு விடுதலைப் போராளிகள். பிறகெப்படிக் காட்டிக்கொடுப்பார்கள்..?*

★★★★ ★★★★

**செய்தி:-** *83ல் நாம் விட்ட தவறை மீண்டும் விடக்கூடாது என சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.*

**எழும் கேள்வி:-** *83ல் மட்டுமா தவறு விட்டீர்கள்..? 58ல் தொடங்கி இன்று வரைக்கும் விடுவது தவறில்லாமல் வேறென்னவாம்..?*

★★★★ ★★★★

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### நுணாவிலில் விபத்தில் ஒருவர் பலி

ஏ9 வீதியில் சாவகச்சேரி – நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 27ம் திகதி இரவு 9.40 மணியளவில் டிப்பர் வாகனமும் உந்துருளியும் நேருக்கு நேர் மோதியதிலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் மீசாலை மேற்கைச் சேர்ந்த மகேஸ்வரன் சுரேந்திரகுமார் (வயது 45) என்பவரே பலியாகியுள்ளார். மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரேசு உதயன் வயது 35 என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### பிறந்த நாளில் இளைஞன் உயிரிழந்த சோகம்!

மன்னார்–தலைமன்னார் பிரதான வீதி புதுக்குடியிருப்பு சந்தியில் கடந்த 6ம் திகதி வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளதோடு, மேலும் ஒருவர் படுகாயமடைந்து மன்னார் பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். பேசாலை முருகன் கோவில் பகுதியைச் சேர்ந்த எ.அசோக்குமார் (வயது–25) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். தனது பிறந்த நாளைக் கொண்டாடிய அன்றைய தினமே இவர் இறந்துள்ளார். மன்னாரில் இருந்து தலைமன்னார் வீதியூடாக இளைஞனும், இன்னுமொருவரும் உந்துருளியில் சென்று கொண்டிருந்தபோது, அதே வீதியூடாக மன்னார் நோக்கிப் பயணித்த வாகனத்துடன் புதுக்குடியிருப்பு பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

### போதையில் தாயைக் கொன்ற மகன்



போதையில் வீட்டுக்கு வந்த மகன் தாயைத் தாக்கியதில் படுகாயமடைந்த தாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்த கொடூர சம்பவம் யாழ்ப்பாணம் கைதடி குமரநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கைதடி குமரநகர் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் தினமும் போதைப் பொருட்களைப் பாவித்துவிட்டு வந்து தனது தாயுடன் சண்டையிட்டு அவர்மீது தாக்குதல் நடத்துவதை வழமையாகக் கொண்டிருந்துள்ளார். இவ்வாறே கடந்த 3ம் திகதி திங்கட்கிழமை இரவும் போதையில் வீட்டுக்கு வந்தவர் தனது தாயைத் தேங்காய் திருவையால் கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால் படுகாயமடைந்த தாயை அயலவர்கள் மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் 4ம் திகதி காலை குறித்த தாய் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் 32 வயதான மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

### மூங்கிலாறில் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு


முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மூங்கிலாறு பகுதியில் கடந்த 7ம் திகதி மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார். புதுக்குடியிருப்பில் இயங்கி வருகின்ற தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணி புரிகின்ற குறித்த இளைஞர் ஆடைத் தொழிற்சாலையில் வேலை முடித்து வீடு திரும்பி சென்று கொண்டிருந்த வேளையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உந்துருளியில் சென்ற இளைஞன் பேருந்து ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் பேருந்தில் மோதுண்டு தூக்கி வீசப்பட்ட நிலையில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். குறித்த விபத்தில் உயிரிழந்த இளைஞன் உடையார்கட்டு தேராவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ரவீந்திரராசா பிரசாந்த் என்ற இளைஞர் ஆவார்.

### குறுக்கே பாய்ந்த சருகுபுலியால் இருவர் பலி!

மட்டக்களப்பு, கரடியனாறு பதுளை வீதி கொடுவாமடுவில் இடம்பெற்ற உந்துருளி விபத்தில் அதில் பயணம் செய்த இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். கடந்த 3ம் திகதி இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செங்கலடி கணபதி நகரைச் சேர்ந்த பேரின்பராசா ஜெயரூபன் (வயது 19) மற்றும் கௌரீஸ்வரன் விது‘ன் (வயது 20) ஆகியோரே பலியாகியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நண்பர்களான இவ்விருவரும் உந்துருளியொன்றில் பதுளைவீதி வழியாக செங்கலடி நோக்கி வந்துகொண்டிருந்துள்ளனர். அப்பொழுது கொடுவாமடு எனுமிடத்தைக் கடக்கும்போது சருகுபுலி எனப்படும் புலி இனத்தைச் சேர்ந்த விலங்கு திடீரென வீதியைக் கடக்க முற்பட்டுள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம்

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 06 58 75 05 09
CITY EXPRESS
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# இலங்கைத் தீவில் 3ம் நிலைக்கு தள்ளப்படும் தமிழினம்

## மாற்றியமைக்க புலம்பெயர் தமிழர்கள் என்ன செய்யவேண்டும்?

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

விடுதலைப் போராட்டமோ அரசியல் போராட்டமோ எதை எடுத்துக் கொண்டாலும் சிறந்த இராஜதந்திரம் இல்லையெனில் அவை தோற்றுப்போகும். தலைமைத்துவம் எத்தகைய வழிமுறைகளை வகுத்தாலும் தற்கால உலகுக்கு ஏற்ப தம்மைத் தற்காத்துக் கொண்டு செல்வதற்கு இராஜதந்திரம் முக்கியமானது. உலகின் பல நாடுகளின் அரசியல் பொருளாதார வெற்றிக்கு இராஜதந்திர செயற்பாடுகளில் பெற்ற அடைவு மட்டங்கள் அதிகரித்தமையே காரணமாக அமைந்தன.

தமிழ் மக்கள் மத்தியில் இந்த இராஜதந்திரம் எந்த அடைவு மட்டத்தில் இருக்கின்றது என்பதை ஆராய்ந்தால் அது வெறும் பூச்சியமாகவே காணப்படுகின்றது. தமிழீழ இராஜதந்திரி அன்ரன் பாலசிங்கத்திற்கு பின்னர் தமிழ் மக்களுக்கு சிறந்த இராஜதந்திரி கிடைக்கவில்லை. விடுதலைப் போராட்டம் பலவீனம் அடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.



இராஜதந்திரி அன்ரன் பாலசிங்கம், பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் போன்றோர் சர்வதேச அரங்கில் தமிழரின் இராஜதந்திர அடையாளமாகத் திகழ்ந்தனர். அவர்களின் திடீர் மறைவு தமிழ் மக்களை பேரியல் வீழ்ச்சிக்கு கொண்டுசென்றது. முள்ளிவாய்க்கால் அவலத்திற்கும் இது ஒரு காரணமாக அமைந்தது. இந்த அவலத்திற்கு பின்னரும் தமிழினம் இராஜதந்திர செயற்பாடுகளில் பலவீனமாக நிலையில் இருப்பதாலேயே இலக்கை நோக்கிப் பயணிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

சிறீலங்காவில் கடந்த ஏப்ரல் 21 தாக்குதல் வரை தமிழர் அரசியல் பிரச்சினையே சூடு பிடித்திருந்தது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, அதற்கு சார்பாக அரசியல் யாப்பு மாற்றம் போன்றன பேசுபொருளாக இருந்தன. நில விடுவிப்பு, கைதிகள் விடுவிப்பு, மீள்குடியேற்றம், அபிவிருத்தி போன்றன தமிழர் தரப்பின் கோரிக்கைகளாக இருந்தன. எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ் முஸ்லிம் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு பின்னர் தமிழர்களின் பிரச்சினைக் கோவைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டு பெட்டகத்திற்குள் போடப்பட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதலின் பின்னர் அண்மையில், முஸ்லிம் அமைச்சர்கள் தமது பொறுப்புக்களை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து சிறீலங்கா அரசியல் பெரும் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கின்றது. முஸ்லிம் அமைச்சர்களை மீண்டும் அரசுக்குள் உள்வாங்குவது தொடர்பான பேச்சுக்களே நடைபெற்று வருகின்றன.

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர் சிறீலங்காவில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிலருக்கு கடும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. குறிப்பாக, அமைச்சர் றிசார்ட் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி இவர்கள் உடனடியாக பதவி விலக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை வலுத்தது. இதன் உச்சமாக, கடும்போக்கு சிங்களப் பிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் உண்ணாவிரதத்தில் குதித்தார்.

இந்தப் பின்னணியில் சிறீலங்கா அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அனைத்து அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் உடனடியாகவே தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து கூட்டாக வெளியேறினர். முஸ்லிம்களின் மத அமைப்பான உலமா சபையின் ஆலோசனைக்கு இணங்க, இனத்தையும் மதத்தையும் பாதுகாக்கும் நோக்குடன் தாம் அனைவரும் பதவி விலகுகின்றார்கள் என அவர்கள் அறிவித்தனர்.

இந்தப் பதவி விலகல் சிங்களத் தலைவர்களின் ஆலோசனை மற்றும் அனுசரணையுடனேயே இடம்பெற்றது. அத்துரலிய ரத்தின தேரர் உண்ணாவிரதம் தொடங்கியவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முஸ்லிம் அமைச்சர்களுக்கு ஒரு அறிவுறுத்தலை விடுத்திருந்தார். அத்துரலிய இரத்தின தேரருக்கு ஏதாவது நேர்ந்தால் அது சிங்கள - முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தி விடும் என்பதால் இவர்கள் பதவி விலகுவது நல்லது என்றார்.

எனினும், சிறீலங்கா அமைச்சரவையின் சிரேஸ்ட அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்திய பின்னர் தாம் பதவி விலகப்போகின்றனர் என அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் தெரிவித்தனர். அதன்படி அலரி மாளிகையில் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை முடித்துக்கொண்டு, அங்கு வைத்தே முஸ்லிம் தலைவர்கள் செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து தாம் பதவி விலகுகின்றனர் என அறிக்கை விட்டனர்.

முஸ்லிம்கள் இந்த பொது அறிவித்தலை உலமா சபையின் அலுவலகத்தில் வைத்து அல்லது சிரேஸ்ட பள்ளிவாசல் ஒன்றில் வைத்து விடுத்திருக்க முடியும். அதை விடுத்து ரணில் விக்கிரமசிங்கவின் அலரி மாளிகையில் வைத்து பொது அறிவித்தல் விடுத்து பதவி விலகவேண்டிய அவசியம் இல்லை. இதன் மூலம் பதவி விலகல் ஒரு அரசியல் நாடகம் என்பது தெளிவாகின்றது. பௌத்த சிங்களப் பிக்குகளை ஏமாற்றும் செயற்பாடு என்பது அம்பலமாகியிருக்கின்றது.

> 1989 ஆம் ஆண்டு சிறீலங்காவின் சனத்தொகைக் கணக்கெடுப்பில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 21 இலட்சத்து 24 ஆயிரமாகவும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 12 இலட்சத்து 49 ஆயிரமாகவும் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 22 இலட்சத்து 70 ஆயிரமாகவும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 18 இலட்சத்து 69 ஆயிரமாகவும் உயர்ந்தது.

எனினும், முஸ்லிம் தலைவர்களின் இந்த அறிவிப்பானது தமிழ்த் தலைவர்களுக்கு முகத்தில் அறைந்தால் போன்றது. இதுவரை எந்தத் தமிழ்த் தரப்பும் இப்படி கூட்டாக தமது பதவிகளை உதறித் தள்ளியதில்லை. இந்த பதவி விலகல் மூலம் முஸ்லிம் தலைவர்கள் தமது இராஜதந்திரத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். சிங்களத்துடன் ஒட்டியுறவாடும் தமது ஒட்டுண்ணி வாழ்க்கையை அம்பலப்படுத்தியிருக்கின்றனர்.

சிறீலங்காவில் தமது இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாகவே முஸ்லிம்களின் இந்த பதவி விலகல் பார்க்கப்படுகின்றது. முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் எப்போதும் ஒட்டுண்ணிகளேதான். எந்த அரசு பதவிக்கு வருகின்றதோ அந்த அரசில் போய் ஒட்டிக் கொள்வார்கள். அது அவர்களின் வியாபாரத் தந்திரம். உயிர்வாழ் இராஜதந்திரம்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

### பொன்.சிவகுமாரனின் 45வது நினைவு!

தியாகி பொன்.சிவகுமாரனின் 45வது ஆண்டு நினைவு நாள் கடந்த 5ம் திகதி யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் பல்கலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.




யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் தியாகி பொன்.சிவகுமாரனின் உருவப் படத்துக்கு மலர் தூவி சுடர் ஏற்றி மாணவர்கள் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

### யாழ் பொது நூலகம் எரியூட்டப்பட்ட 38வது நினைவேந்தல்

சிறீலங்கா ஆட்சியாளர்களின் இன அழிப்புத் திட்டத்தின் ஒரு நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்ட யாழ் பொது



நூலகம் எரியூட்டப்பட்டதன் 38வது வருட நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் பொது நூலக முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுடரை ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்ததை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உட்பட்ட உறுப்பினர்கள் சுடரேற்றி நினைவு கூர்ந்தனர். தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் திரு சுகந்தன் திரு கிருபா ஆகியோர் நினைவுரை ஆற்றினர். இதே வேளை யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்ட வேளை அதனை கேள்வியுற்று மாரடைப்பால் மரணமடைந்த தாவீது அடிகளாரையும் நினைவு கூரப்பட்டமை குறிப்பிடதக்கது.

### தமிழரசுக் கட்சியின் அலுவலகம் முன் போராட்டம்

சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராகப் போராடும் மக்கள், தமிழரசுக் கட்சியின் முன்னாலும் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், கடந்த முதலாம் திகதி தமிழரசுக் கட்சியின் யாழ் அலுவலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியாவில் இருந்து வந்த இவர்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

### யாழில் அதிகரித்துள்ள போலி காணி ஆவணங்கள் ! சத்தமின்றிப் பறிபோய்க் கொண்டிருக்கும் தமிழர் நிலங்கள்

யாழில் போலி ஆவணங்கள் தயாரித்து காணிகள் விற்கப்படும் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும், அது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு யாழ்.மாவட்ட செயலகம் கோரியுள்ளது. காணிகளுக்கு போலி உறுதிகள் முடித்து காணிகள் விற்கும் செயற்பாடுகள், வெளிநாடுகளில் நீண்ட காலமாக வசித்து வருவோரின் காணிகளை கையகப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அவ்வாறு கையகப்படுத்தும் காணிகளை குறைந்த விலைகளுக்கு விற்பனை செய்கின்றனர். அக்காணிகளை வாங்கியவர்கள் பின்னர் அதனை சட்டரீதியாக, சட்டத்தரணிகள் ஊடாக தமக்கு பெயர் மாற்றம் செய்ய முற்படும்போதே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் அவர்களுக்கு தெரிய வருகின்றன. 2018ம் ஆண்டு முதல் இதுவரையான கால பகுதியில் காணி பதிவாளரின் சார்பாக மேலதிக காணி பதிவாளர் நீதிமன்றில் 4 வழக்குகளை எதிர்கொண்டு உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இவ்வாறான விற்பனைகள் மூலம் ஏராளமான காணிகள் முஸ்லீம்களுக்கு விற்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சிறீலங்கா அமைச்சரவையில் உள்ள சில முஸ்லீம் தலைமைகள் ஊடாக குறித்த காணிக் கொள்வனவுகளுக்கான பெருமளவு நிதிகள் கைமாறப்படுவதாகவும், பலஸ்தீனர்களின் நிலங்களை யூதர்கள் வாங்கி வாங்கி தங்களுக்கென்று இஸ்ரேல் நாட்டை அமைத்தது போன்று, தமிழர்களின் நிலங்கள் இவ்வாறு பறிபோய்க்கொண்டிருப்பதாக தாயகத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பலாலி இனப்படுகொலைச் சிப்பாய் பலி

யாழ். பலாலி சிறீலங்கா இனப்படுகொலை இராணுவ முகாமுக்குள் குண்டு வெடிப்பு இடம்பெற்ற நிலையில் ஒருவர் பலியானதுடன் நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த முதலாம் திகதி மாலை குறித்த இராணுவ முகாமில் சிரமதான நடவடிக்கையில் இனப்படுகொலை இராணுவ அணி ஒன்று ஈடுபட்டிருந்தது. இதன்போது நான்கு இராணுவத்தினர் இணைந்து கல் ஒன்றை அகற்றுவதற்கு முற்பட்டுள்ளனர். அவ்வேளை கல் அருகே புதைக்கப்பட்டிருந்த அமுக்க வெடி வெடித்துள்ளது. குறித்த வெடி விபத்தினால் இடுப்புக்கு கீழ் பகுதி முற்றாக சிதைவடைந்த நிலையில் சம்பவ இடத்தில் ஓர் இனப்படுகொலைச் சிப்பாய் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்தனர்.

## முன்னாள் போராளிகள் மீது பழிபோட்டுத் தப்பிக்கும் திட்டத்துடன் நடந்த

# வவுணதீவில் சிறீலங்காக் காவல்துறையினர் கொலைகள்

## எப்படி கொன்றோம் என விளக்கிய சஹ்ரானின் சகாக்கள்!



வவுணதீவு சோதனைச் சாவடியில் சிறீலங்காக் காவல்துறையினர் இருவர், கடந்த ஆண்டு நவம்பர் 29ம் திகதி, குத்தியும், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில், முன்னாள் போராளி ஒருவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார். எனினும் ஏப்ரல் 21 உயிர்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்தப் படுகொலையை மேற்கொண்டவர்கள் தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பின் தற்கொலைதாரி சஹ்ரான் ஹாஷிமினின் முக்கிய சகாக்கள் எனக் கண்டறியப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஏப்ரல் மாதம் 27ம் திகதியன்று சஹ்ரானின் சாரதியான முஹமது சரீப் ஆதம் பாலெப்பை கபூர் (வயது 54), கம்சா முகைதீன் இம்ரான் (வயது 31) முஹமது ஆசிம் சியாம் (வயது 34) ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் காத்தான் குடியைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட அந்த மூவரும், விசாரணைகளின் பின்னர் எவ்வாறு இந்தக் கொலைகளை மேற்கொண்டனர் என்பதை அறிந்துகொள்வதற்காக கொழும்பிலிருந்து கொலை செய்யப்பட்ட வவுணதீவு சோதனைச் சாவடிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு அக்கொலைகள் குறித்து செய்முறை விளக்கமளித்தனர்.

இதன்போது அம் மூவரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் மீது பழி ஏற்படும் வகையில் எவ்வாறு திட்டமிட்டு இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர் என்பதை விளக்கியதுடன், அந்தப் படுகொலையை எதற்காக, எவ்வாறு நடத்தினார்கள் என்பதையும் விளக்கியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாக இந்த விசாரணையில் பங்கேற்ற சிறீலங்காக் காவல்துறை உயரதிகாரியொருவர் தெரிவித்ததாவது, திஹாரியில் வேலை ஒன்று இருக்கின்றது. அதற்கு ரி- 56 ரக துப்பாக்கிகள் தேவை. எனவே, அதனை எடுக்குமாறு வவுணதீவு காவல்துறையினர் கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர், சஹ்ரான் கட்டளையிட்டிருந்தார். வவுணதீவு சம்பவம் இடம்பெறுவதற்கு, 3 தினங்களுக்கு முன்னர் கொழும்பில் வைத்து கபூரிடம் ரி- 56 ரக துப்பாக்கியை கொடுத்த சஹ்ரான், அவரை கொழும்பு - அக்கரைப்பற்று பேருந்தில் ஏற்றி அனுப்பியுள்ளார். கபூர் காத்தான்குடியில் வந்திறங்கியபோது அவரை ஏற்றிச் செல்வதற்கு கார் ஒன்று ஆயத்தமாக இருந்தது. அதிலேறிய கபூர், ஒல்லிக்குளம் பகுதிக்குச் சென்று, அங்கு அந்த துப்பாக்கியை மறைத்து வைத்துள்ளார்.

**நவம்பர் 29ம் திகதியை தெரிவு செய்தனர். ஏனென்றால் 27ம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் ஆகும். அதன் பின்னர் காவல்துறையினரைக் கொன்றால் அது புலிகளின் முன்னாள் போராளிகள் மீது பாதுகாப்பு படையினர் முழு சந்தேகமும் ஏற்படும். எனவே, எங்கள் மீது ஒரு துளிகூட சந்தேகம் ஏற்படாது என்பதற்காக இந்த இடம் மற்றும் திகதியைத் தெரிவு செய்தோம் என்றார்.**



கைது செய்து ஆறு மாதங்களின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளி.

வவுணதீவு சம்பவம் இடம்பெறுவதற்கு 3 கிழமைக்கு முன்னர் நில்கான், இம்ரான் மற்றும் சியாம் ஆகியோர் உன்னிச்சை பகுதியிலிருக்கும் கபூரின் நண்பனின் வாடிக்கு (கொட்டகை) சென்றுள்ளனர். இதன்போது வவுணதீவு வலையிறவு பாலத்தில் காவல் சோதனைச்சாவடியில் காவல்துறையினர் இருப்பதை அவதானித்தனர். இதனையடுத்து இந்த சோதனைச் சாவடியை தெரிவு செய்துள்ளனர்.

நவம்பர் 29ம் திகதியை தெரிவு செய்தனர். ஏனென்றால் 27ம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் ஆகும். அதன் பின்னர் காவல்துறையினரைக் கொன்றால் அது புலிகளின் முன்னாள் போராளிகள் மீது பாதுகாப்பு படையினர் முழு சந்தேகமும் ஏற்படும். எனவே, தங்கள் மீது ஒரு துளிகூட சந்தேகம் ஏற்படாது என்பதற்காக இந்த இடம் மற்றும் திகதியைத் தெரிவு செய்தனர் என்றார்.

அன்றையதினம், முஹமது ஆப்தீன் நில்கான் தலைமையில் இந்தத் தாக்குதலுக்கு, ஒல்லிக்குளம் பகுதியில் அமைந்திருந்த முகாமிலிருந்து கபூரும், நில்கானும் ஸ்கூட்டிபப் ரக உந்துருளிகளில் ரி- 56 ரக துப்பாக்கியும் மாடு அறுக்கும் கூரிய கிறிஸ்ரக கத்திகளையும் எடுத்துக்கொண்டு அங்கிருந்து நள்ளிரவு 1 மணிக்கு வெளியேறி காத்தான்குடி பகுதிக்கு வரும்போது இடையில் காத்திருந்த இம்ரானை ஏற்றிக் கொண்டனர்.

கல்லடி பாலத்தின் வாவிக்கரை வீதி ஊடாக பயணித்த உந்துருளிகள், மட்டு காவல் நிலையத்துக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோலை நிரப்பிக்கொண்டு ஏறாவூர் செங்கலடி சந்திக்குச் சென்று அங்கிருந்து பதுளை வீதி ஊடாக கரடியனாறு, ஆயித்திமலைக்குச் சென்றுள்ளது.

அங்கிருந்து வவுணதீவு காவல் நிலையத்துக்கு முன்னாள் உள்ள சந்திக்குச் சென்று அங்கு காவல் சோதனைச் சாவடிக்கு சென்றுள்ளது. அப்போது, சோதனைச் சாவடிக்கு முன்பாக நடுவீதியில் நின்றுள்ளனர்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## ஒப்பரேசன் டபிள் எட்ஜ்: 35

# மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி
சேரமான்

மந்திரத்தால் மாங்காயை வீழ்த்தும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற மாயா வாத சாம்ராச்சியத்தை அமைப்பதற்கான அறிவித்தலை வெளியிட்டு தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கனவுலகிற்குள் மூழ் கடித்ததோடு கே.பி நின்றுவிடவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட் டுக் கிளைகளையும், தமிழ்த் தேசிய அமைப் யிருந்தோம்.



எதிரியைப் பணிய வைப்பதற்கு சாம, தான, பேத, தண்ட என்ற நான்கு யுக்திகள் இருப்பதாக ஏறத்தாள இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அர்த்தசாத்திரத்தில் கௌடில்யர் எழுதி யிருந்தார்.

இதில் சாமம் என்பது இனிவாகவும், கனிவாகவும் எதிரியோடு பேசி மடக்கு வதைக் குறிக்கும். இந்த யுக்தியைத் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட் டுக் கிளைகளிலும், தமிழ்த் தேசிய அமைப் புக்களிலும் பதவி மோகத்துடன் இருந்த வர்களை மடக்குவதற்கு கே.பி கையாண் டார்.

இதற்கு அடுத்த தானம் என்ற யுக்தி கையூட்டுக் கொடுப்பதற்கு (லஞ்சம்) நிக ரானது. பண்டைக் காலத்தில் எதிரியை மடக்குவதற்கு எதிரிக்கு அன்பளிப்புக்களை அள்ளி வழங்கும் யுக்தி இது. இந்த யுக்தியைத் தான் இராமு.சுபன் போன்று ஆசிய நாடுகளில் தங்கியிருந்த போராளி களின் விடயத்தில் கே.பி கையாண்டார். கற்கைகளை மேற்கொள்வதற்காகவும், இயக்க செயற்பாடுகளுக்காகவும் போர் ஓய்வுக் காலப்பகுதியில் தமது பொறுப் தப் போராட்டம் சாத்தியமில்லை என்று தயாமோகன், இராமு.சுபன் ஆகியோர் ஊடாக இவர்களில் பலரை நம்ப வைத்த கே.பி, மேற்குலக நாடுகளுக்கு செல் வதற்கு இவர்களுக்கு ஆசை காட்டியதன் மூலம் இவர்களின் போர்க்குணத்தை மழுங் கடிக்க முடியும் என்று கருதினார். இதுவே நடந்தது.





## கோத்தபாய களமிறக்கிய ஆட்டநாயகர்

புக்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இன்னுமொரு நகர் வையும் அவர் மேற்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை மைச் செயலகம் என்ற பெயரில் இயங்கக் கூடிய காகிதப்புலிக் கட்டமைப்பை உரு வாக்குவது தான் கே.பியின் அந்த நகர்வு. அதற்கு முன்னோடியாக ராம், நகுலன், பிரபா, தவேந்திரன், விநாயகம், அமுதன், தயாமோகன், இராமு.சுபன், கே.பி.ரெஜி ஆகியோரை உள்ளடக்கிய நவக்கிரக செயற் குழுவை கே.பி அமைத்தார்.

இவர்களில் ராம், நகுலன், பிரபா, தவேந் திரன் ஆகியோர் கிரிதல, மின்னேரியா ஆகிய பகுதிகளில் உள்ள சிங்களப் படை முகாம்களில் இருந்தவாறு செயற்பட்டதை ஏற்கனவே வெளிவந்த தொடர்களில் வெளிக் கொணர்ந்திருந்தோம். அத்தோடு தவேந் திரனின் உதவியுடன் விநாயகம் அவர்களின் குடும்பத்தினரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்து, அவர்களின் ஊடாக விநாயகத்தைத் தமது கைப்பாவையாக சிங்களப் புலனாய்வாளர்கள் மாற்றியமை பற்றியும் எமது முன்னைய தொடர்களில் பதிவு செய்திருந்தோம். இவர்களை விட தமிழ்நாட்டில் இந்தியப் புலனாய்வாளர்க ளின் கையாளாக அமுதன் இயங்கியதை நாம் வெளிக்கொணர்ந்தமையும் வாசகர்க ளுக்கு நினைவில் இருக்கலாம்.

இவர்களை விட தயாமோகன், இராமு. சுபன் ஆகியோர் மலேசியாவில் கே.பியின் இரு கரங்களாக செயற்பட்டதையும், தனது வசமிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை நிரந்தரமாகக் கபளீகரம் செய்வதற்காக கே.பியின் ஐரோப்பிய பிரதி நிதியாக கே.பி.ரெஜி மாறியதையும் எமது கடந்த தொடர்களில் அம்பலப்படுத்தி

**இதன்மூலம் கோத்தபாய ராஜபக்சவின் மூளையத்தில் உதித்த ஒப்ரேசன் டபிள் எட்ஜ் நடவடிக்கைக்கு கே.பி கச்சிதமாக செயல்வடிவம் கொடுத்தார்.**

பாளர்களால் ஆசிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இவர்களில் பலர் யுத் தம் முடிவடைந்ததும் செய்வதறியாது திணறினார்கள்.

இராமு.சுபன், தயாமோகன் ஆகியோர் ஊடாக இவர்களை அணுகிய கே.பி, தனது திட்டத்திற்கு இணங்கினால் இவர்களை ஐரோப்பாவிற்கோ அன்றி கனடாவிற்கோ அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்ப தாக உத்தரவாதம் அளித்தார். கே.பியின் இந்த யுக்தியை மேலோட்டமாகப் பார்ப் பவர்கள், நட்டாற்றில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த போராளிகளை பத்திர மாக மேற்குலக நாடுகளுக்கு அனுப்பும் நல்ல நோக்கத்துடன் கே.பி நடந்து கொண் டார் என்று கருதக்கூடும். ஆனால் கே.பி அவர்களின் நோக்கம் அவ்வாறாக இருக்க வில்லை. ஏனெனில் ஆசிய நாடுகளில் தங்கி யிருந்த போராளிகளில் பலர் தாயகம் திரும்பி மீண்டும் போராட வேண்டும் என்ற துடிப் பில் இருந்தார்கள். தாயகத்தில் இனி ஆயு

இதன்மூலம் கோத்தபாய ராஜபக்சவின் மூளையத்தில் உதித்த ஒப்ரேசன் டபிள் எட்ஜ் நடவடிக்கைக்கு கே.பி கச்சிதமாக செயல்வடிவம் கொடுத்தார்.

கே.பி கையாண்ட கௌடில்யரின் தானம் என்ற யுக்திக்குப் பலியானோரில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களின் சகோதரரான லூக்காஸ் அம்மானும் ஒருவர். யுத்தம் முடிவடைந்ததும் இவரை அணுகிய கே.பி, தலைமைச் செயலகம் என்ற காகிதப்புலி அமைப்பை உருவாக்குவதற்கு தனக்கு உதவுமாறும், அவ்வாறு செய்தால் அதற்குப் பிரதியுபகாரமாக அவருக்கு தமிழீழ விடுத லைப் புலிகளின் பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளர் பதவியை வழங்குவதாகவும் கூறினார்.

இவ்வாறு சாம, தான யுக்திகளை மலேசி யாவில் இருந்து கனக்கச்சிதமாகக் கையாண்ட கே.பியால், அதே கச்சிதத்தோடு கௌடில் யர் வகுத்த பேத, தண்ட ஆகிய இரண்டு யுக்திகளையும் கையாள முடியவில்லை. இதற்குத் தேவையான ஆட்கள் மேற்குலக நாடுகளில் கே.பியிடம் இல்லாததே காரண மாகும். ஆனால் இதற்கு மாற்றுத் திட்ட மொன்றை ஒப்ரேசன் டபிள் எட்ஜ் நட வடிக்கையின் பிதாமகரான கோத்தபாய ராஜபக்ச வைத்திருந்தார்.

கோத்தபாய வகுத்திருந்த பிளான் பி எனப்படும் இத் திட்டத்தின் ஆட்டநாய கராக விநாயகம் களமிறக்கப்பட்டார். சேக ரம்பிள்ளை விநாயகமூர்த்தி என்ற இயற் பெயரைக் கொண்ட விநாயகம் அவர்கள் ஏலவே உலகத் தமிழர்களால் அறியப்பட் டிருந்த ஒருவர். இவரைப் பலர் நேரில் கண் டிருக்காத பொழுதும்,

தொடர்ச்சி 14ம் பக்கம்

### பாகிஸ்தான் குடும்பம் - மன்னிப்புச்சபை வேண்டுகோள்

விசா காலாவதியான பின்னரும் தங்கியிருந்தமைக்காக கைது செய்யப் பட்ட பாகிஸ்தான் குடும்பத்தை நாடு கடத்த வேண்டாமென்று சிறீலங்கா அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப் புச்சபை வலியுறுத்திக் கேட்கப்பட்டுள் ளது. பாகிஸ்தானிய கத்தோலிக்கக் குடும்பம் ஒன்று அவர்களது நாட்டில் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய காரணத்தினால் தப்பியோடி வந்து இலங்கையில் தஞ்சம் கோரியது.

இப்போது அந்தக் குடும்பம் வருந்ததக்க சூழ்நிலைகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை உடனடியாக நாடு கடத்துவதற்கான திட்டங்கள் இருப்பதாகவும் அறியவருவ தாகவும் கூறியுள்ள சர்வதேச மன்னிப் புச்சபை, இந்தக் குடும்பத்தினரைப் பலவந்தமாக பாகிஸ்தானுக்குத் திருப்பி யனுப்புவது அவர்களை ஆபத்திற்குள் தள்ளுவதாகவே அமையும். ஏனெனில் அண்மையில் அங்கு சிறுபான்மையின ரின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள் ளாகியுள்ளது என்று சுட்டிக்காட்டி யுள்ளது.

### மீண்டும் இரகசியமாக குடியமர்த்தப்பட்டனர் அகதிகள்!

வவுனியா பூந்தோட்டத்தில் மீண்டும் இரகசியமாக வெளிநாட்டு அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து இலங் கைக்கு வந்துள்ள அகதிகளில் ஒரு தொகுதியினரே இவ்வாறு குடியமர்த்தப் பட்டுள்ளனர். வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்துக்கு கடந்த வாரம் நள்ளிரவு 77 அகதிகள் அழைத்து வரப் பட்டுள்ளனர். இதற்கு முன்னர் கடந்த 22ம் திகதி 35 அகதிகள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் குடியமர்த்தப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு அகதிகளை சிங்களக் பகுதிகளில் குடியமர்த்தாமல் தமிழர்க ளின் பிரதேசங்களில் குடியமர்த்திவரு வது குறிப்பிடத்தக்கது.

### ஊடகவியலாளர் நடேசனுக்கு அஞ்சலி!

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 15வது ஆண்டு நினைவு தின நிகழ்வு, மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக



அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வா.கிருஸ் ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடே சனின் திருவுருவப் படத்துக்கு மலரஞ் சலி செலுத்தப்பட்டது. தீபச் சுடர் ஏற்றப்பட்டதனைத் தொடர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மட்டக்களப் பில் வைத்து 2004 ஆண்டு ஊடக வியலாளர் ஐயாத்துரை நடேசன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.




## மிருகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் ஆனால் விட்டு விலகியவுடன் பகையை மறந்துவிடும். ஆனால், சக மனிதன் மீது சக மனிதனுக்கு ஏன் இத்தனை கோபம் விலகிய பின்னரும் அதிகரிக்கின்றது?

**கேள்வி:–** மிருகங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் ஆனால் விட்டு விலகியவுடன் பகையை மறந்துவிடும். ஆனால், சக மனிதன் மீது சக மனிதனுக்கு ஏன் இத்தனை கோபம் விலகிய பின்னரும் அதிகரிக்கின்றது? பின்னர் திட்டமிட்டுப் பழிவாங்குவது ஏன்?

**மணிவண்ணன் லவன் பொபினி பிரான்ஸ்**

**பதில்:–** மனிதன் தனக்கு இருப்பதாக தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆறாவது அறிவுதான் காரணம். பகுத்தறியும் மனிதனின் ஆழ்ந்த சிந்தனைதான் இந்தப்



பழிவாங்கும் வெறிக்குக் காரணமாகின்றது. மனிதனின் இந்தச் சிந்தனை பற்றி மருத்துவம் சொல்வதுதைக் கொஞ்சம் கேளுங்கள்.

'நீங்கள் ஒரு நபர் மீது எரிச்சலும், கோபமும் கொள்ளும்போது உங்கள் மூளையில் ஒரு வடிவம் உருவாகிறது. உங்கள் எரிச்சலும், கோபமும் அதிகரிக்க அதிகரிக்க அந்த வடிவம் மிகவும் வலுவானதாக மாறிவிடுகிறது. அந்த வலுவான நிலைமை பின்னர் அவர் குறித்து உங்களின் எண்ணங்களில் இயல்பாகவே எதிர்மறையாக மாறிப்போகிறது. அதன் பின் அந்நபர் மீது கோபமும், எரிச்சலும் இல்லாமல் வாழ்வது உங்களுக்கு இயலாமல் போய்விடுகின்றது. இது ஒரு கட்டத்தில் அந்நபரை இல்லாமல் செய்யும் அளவிற்கு உங்கள் மனநிலையைக் கொண்டுசென்று விட்டுவிடுகின்றது. இது அந்நபருக்கு மட்டுமல்ல, இந்தப் பழிவாங்கும் எண்ணம்கொண்டு பழிவாங்க நினைப்பவரையும் ஆரோக்கியமற்றவராக மாற்றிவிடுகின்றது' என்கின்றன மருத்துவ ஆராய்ச்சிகள்.

ஆனால், இந்தச் சிந்தனையில் இருந்து விடுபட நல்லதொரு மாற்று மருந்து இருக்கின்றது. அந்த மருந்தின் பெயர் 'மன்னிப்பு'. மன்னிக்கும் பழக்கமுடைய மனிதர்கள் ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள் என்கின்றன பல்வேறு ஆராய்ச்சி முடிவுகள்.

ஆனால் இந்த 'மன்னிப்பு' மருந்துகூட பலருக்கும் கசப்பானதாக இருக்கலாம். அது எப்படி எல்லோரையும் மன்னிப்பது என்று கேட்கலாம். அதற்கு திருவள்ளுவர் இன்னொரு அதி சிறந்த மருந்தைக் கண்டுபிடித்துத் தந்திருக்கின்றார். அந்த மருந்து...



**'இன்னா செய்தாரை**
**ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்துவிடல்'**

என்பதாகும். அதாவது, இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்குத் தீங்கு செய்தாரைத் தண்டிக்கும் முறையாவது தீமை செய்தவர் வெட்கப்படும் அளவுக்கு நன்மையைச் செய்வதுடன் அவர் செய்த தீமையையும் தாம் செய்த நன்மையையும் மறந்து விடுதலாகும். பிறர் செய்த தீமையை நினைப்பதால் பகைமை உணர்வும், தாம் செய்த நன்மையை நினைப்பதால் தன் முனைப்பும் துளிர்க்கும். அதனால் மறந்து விடுக என்கிறார் வள்ளுவர்.

இப்போது சொல்லுங்கள் இதனைவிட நல்மருந்து இந்த உலகில் இருக்கமுடியுமா..?

**கேள்வி:–** தன்னம்பிக்கை எப்போது வலுப்படும் அரிச்சந்திரனே..?

**பொன்.கௌரிதாசன் பிரான்ஸ்**

**பதில்:–** ஒன்றை செய்துமுடிக்கவேண்டும் என்று உறுதியாக முடிவெக்கும்போது. ஆனால் அவற்றைவிட தனியாக மாட்டிக்கொள்ளும்போதுதான தன்னம்பிக்கை இன்னும் அதிகமாக வலுப்படுகின்றது என்கின்றது ஆய்வு முடிவுகள்.

அரோன் ரால்ஸ்டொன் (Aron Ralston) என்ற இந்த அமெரிக்கரின் பெயரை 2003 வரை உலகில் எவரும் கேட்டிருக்க வாய்ப்பில்லை. மலையேறுவதில் பிரியம் கொண்ட அரோன் அமெரிக்காவிலுள்ள உத்தா மலைப்பகுதியில் தனது 28வது வயதில் 2003ம் ஆண்டு மலையேறினார்.



எதிர்பாராத விதமாக வழுக்கி விழ பாறையிடுக்கில் அவரது ஒரு கை சிக்கிக் கொண்டது.

அந்தக் கால நிலையில் யாரும் மலையேற செல்வதும் இல்லை. உதவிக்கு மக்களை அழைத்துப் பார்த்தார். அந்த இடத்தில் யாரும் இல்லை.

ஒரு மணி நேரம், இருமணி நேரம் என ஓடிய மணித்துளிகள்... ஒரு நாள், இரண்டு நாள்... என நீளத் தொடங்கியது. பையில் இருந்த சிறிதளவு நீரும், சிறிதளவு உணவும் தீர்ந்து முடியும் நிலையிலும் யாரும் வரவில்லை. ஐந்து நாட்கள் உதவிக்கு முயன்ற அவர் முன்னால் கடைசியில் இரண்டு வழிகள் தான் இருந்தன. ஒன்று, உயிரை விடுவது. இரண்டு, பாறையில் மாட்டிக் கொண்ட கையை வெட்டி எறிந்து உயிர்வாழ்வது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

---

**தவுறுக்கு வருந்துகின்றோம்**

கடந்த வாரம், **புல்லரிக்குது, புல்லரிக்குது என்கின்றார்கள். அப்படி எதனைக் கேட்டால் புல்லரிக்கும்? புல்லரிக்கிறமாதிரி ஒன்று சொல்லுங்களேன் பார்க்கலாம்..** என்ற கேள்வியைக் கேட்டிருந்தவர்.

**க.கலைச்செல்வன் பிரான்ஸ்**

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# வர்த்தகம் மூலதனம்

**ஜெகன்**

## அமெரிக்காவிடம் இருந்து 105 போர் விமானங்களை வாங்கும் ஜப்பான்

அமெரிக்காவிடம் இருந்து F35 ரகத்தை சேர்ந்த 5வது தலைமுறைப் போர் விமானங்களை வாங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது. ரடார் கண்களுக்குப் புலப்படாத இந்த விமானம், ஜப்பானிடம் ஏற்கனவே உள்ளது. இந்நிலையில் மேலும் 105 விமானங்களை வாங்க முடிவு செய்துள்ளது.

அரசு முறைப் பயணமாக ஜப்பான் சென்றுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின், செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய டிரம்ப், தங்களிடம் இருந்து கு35 ரகத்தின் 105 போர் விமானங்களை ஜப்பான் வாங்க உள்ளதாக தெரிவித்தார்.



இவற்றை வாங்கும் பட்சத்தில், F35 ரக போர் விமானங்களை அதிக எண்ணிக்கையில் வைத்திருக்கும் அமெரிக்க நட்பு நாடாக ஜப்பான் இருக்கும் என்றும் டிரம்ப் கூறினார். F35 போர் விமானம் ஒன்றின் விலை 400 மில்லியன் டொலர்கள். இந்த 105 விமானங்களின் மொத்த விற்பனை 400 பில்லியன் டொலர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையே, ஜப்பான் அருகே கடலில் விழுந்து நொறுங்கிய அந்த நாட்டு F35A ரக போர் விமானத்தைத் தேடும் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து செய்தியாளர்களிடம் அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் தகேஷ் ஐயாவா கூறியதாவது: கடலில் விழுந்து நொறுங்கிய F35A போர் விமானத்தின் பாகங்களையும், விமானியின் உடலையும் தேடும் பணிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. எனினும், அந்த விபத்துக்கான காரணம் குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விரைவில், ஜப்பானின் வடக்கு கடல் பகுதியில் தேடுதல் பணிகள் தொடங்கப்படும்.

இந்த விபத்துக்குப் பிறகு இதுவரை மீட்கப்படாமல் உள்ள விமான இரகசியங்கள் அடங்கிய பாகங்களை எதிரி நாட்டவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக, அந்தப் பகுதி கடலடி கமரா மூலம் கண்காணிக்கப்படுகிறது என்றார் அவர். ஜப்பான் விமானப் படைக்குச் சொந்தமான அதிநவீன F35A போர் விமானம், வழக்கமான பயிற்சியின்போது மிசாவா நகருக்கு 135 கி.மீ. தொலைவில் கடந்த ஏப்ரல் மாதம் 9ம் திகதி விழுந்தது. இந்த விமானம் விபத்துக்குள்ளானது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஒபெக் கூட்டணி நாடுகளின் முடிவால் எரிபொருள் விலை தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்பு!

உற்பத்தி குறைப்பு தொடரும் என உலக எண்ணைய் வள ஒபெக் அமைப்பில் உள்ள நாடுகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளன. இதனால் சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை 1.3 சதவீதம் உயர்ந்து ஒரு பரல் 73.17 டொலராக உயர்ந்தது. இதற்கு முன்பு, கடந்த ஏப்ரல் 26ம் திகதி மசகு எண்ணெய் பரல் 73.40 டொலராக இருந்தது. இதன்பிறகு மீண்டும் ஏறக்குறைய இதே அளவை மசகு எண்ணெய் விலை எட்டியுள்ளது. மசகு எண்ணெய் விலை சரிவால், எண்ணெய் வள நாடுகளின் வருவாய் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதனால், மசகு எண்ணெய் விலையை உயர்த்த உற்பத்தி குறைக்கப்படும் என்ற முடிவை ஒபெக் எனப்படும் பெட்ரோலிய பொருட்கள் ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பு எடுத்தது. அதாவது, ஒபெக் அமைப்பில் உள்ள நாடுகள், ரஷ்யா மற்றும் ஒபெக் அமைப்பில் சாராத எண்ணெய் உற்பத்தி நாடுகள் இணைந்து, மசகு எண்ணெய் உற்பத்தியை கடந்த ஜனவரி 1ம் திகதி முதல் நாள் ஒன்றுக்கு 1.2 மில்லியன் பரல் குறைக்க முடிவு செய்தன.




ஈரானில் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்துள்ளதால், மசகு எண்ணெய்க்கு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இந்த இடைவெளியை நிரப்ப மசகு எண்ணெய் உற்பத்தி குறைப்பு முடிவை ஒபெக் நாடுகள் கைவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சவூதி அமைச்சர் கலீல் அல் பாலிக், கடந்த வாரம் அளித்த பேட்டியொன்றில், சந்தை தேவைக்கேற்ப முடிவு செய்யப்படும் என தெரிவித்திருந்தார். ஐக்கிய அரபு எமிரேட் அமைச்சர் சுகைல் அல் மஜ்ரோவி கூறுகையில், சந்தையில் ஏற்படும் இடைவெளியை எங்களால் நிரப்ப முடியும். அதேநேரத்தில், உற்பத்தி குறைப்பை கைவிடுவது சரியான முடிவு அல்ல என தெரிவித்திருந்தார். இதன் காரணமாகவே மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்தது. இந்த நிலை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அடம்பன் கொடியோடு புடலங்காய் கொடி திரண்டால்...




அசலாமு அலைக்கம்!

என்னடா இது, கிழவன் வழக்கமாக 'வணக்கம்' சொல்கிறவர், இன்றைக்கு அரபு மொழியில் புதுசாக 'அசாலுமு அலைக்கம்' என்று சொல்கிறார் என்று நீங்கள் மண்டையைப் பிய்க்கிறது எனக்கு விளங்குது.

எல்லாம் எங்கடை இசுலாமியத் தமிழ் சகோதரர்களுக்காகத் தான் பிள்ளையள். ரமடான் பண்டிகை போன கிழமையே முடிஞ்சுது என்றாலும், அவையளுக்கு வாழ்த்துச் சொல்கிறது எங்கடை கடமை தானே?

சரி, விசயத்துக்கு வாறன். போன கிழமை நான் ஸ்கா புறோ பக்கம் போயிருந்தன். எல்லாம் காரியத்தோடை தான். ஊர் துளவாரம் ஏதும் அறியலாம், பிறகு அதை ஊர் ஊராகக் கொண்டோடலாம் என்று தான் அங்கை நான் போனேன். ஆனால் அங்கை இருக்கிற தமிழ்க் கடைகளில் எல்லாம் ஒரே பரபரப்பு. எனக்கென்றால் ஒன்றுமே விளங்கவில்லை. என்னதான் நடக்குது என்று பார்ப்பம் என்று கிட்டப் போனால், எங்கடை ஆட்கள் எல்லாம் முசுலிம்



அரசியல்வாதிகளை புகழ்ந்து கொண்டிருந்தீனம்.

அந்த இடத்தில் நின்ற என்னை மாதிரி ஒரு நைன்ரி சொல்லிச்சுது, 'ஒற்றுமை என்றால் என்ன என்பதை உந்த முசுலிம் அரசியல்வாதிகளைப் பார்த்துத் தான் எங்கடை தமிழ்ச் சனம் புரிந்து கொள்ள வேண்டும்' என்று.

உதைக் கேட்டவுடன் எனக்கு சிரிப்புத் தான் வந்திச்சுது. ஒரு பக்கத்திலை கொஞ்சம் கவலையாகவும் தான் இருந்தது. பின்னை என்ன பிள்ளையள், எவ்வளவு ஒற்றுமையாக இருந்த இனம் நாங்கள்? எங்கடை தம்பி பிரபாகரன் ஒரு வார்த்தை கூறினால் யாராவது மறு பேச்சுப் பேசியிருப்பமே? அந்த நாட்களில் எங்கடை ஒற்றுமையைப் பார்த்துச் சிங்களவன் மட்டுமில்லை இலங்கையில் இருக்கிற தமிழ் பேசுகிற முசுலிம் சமூகதத்தின்ரை அரசியல்வாதிகள் கூட திகைச்சுப் போய் நின்றவையள்.

உங்களுக்கு ஞாபகம் இருக்குதோ எனக்குத் தெரியாது பிள்ளையள். 2002ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கினதும், தங்களுக்கும் பேச்சுவார்த்தையில் சம தரப்பு தரப்பட வேண்டும் என்று முசுலிம் அரசியல்வாதிகள் மல்லுக்கட்டிக் கொண்டு நின்றவையள்.

உதைப் பார்த்துப் போட்டு எங்கடை தேசியத் தலைவர் சொன்னவர், 'அவையளும் சமதரப்பாக வரலாம், ஆனால் அவையள் எல்லோரும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறதாலை, அரசாங்கத்தின்ரை தூதுக் குழு அங்கத்தவர்களாகவே பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்ற வேண்டும்' என்று.

அவ்வளவு தான். பேச்சுவார்த்தையில் முசுலிம் சமூகத்தை யார் பிரதிநிதித்துவம் செய்கிறது என்று அவையள் தங்களுக்குள்ளை மல்லுக்கட்டத் தொடங்கி விட்டினம். தான் தான் முசுலிம் மக்களின்ரை தனிப் பெரும் தலைவன் என்று ஒரு பக்கத்திலை கக்கீம் மாத்தையா பறை தட்ட, உதெல்லாம் சரிப்பட்டு வராது, தான் தான் அசுரப்பின்ரை பட்டத்து ராணி என்று சொல்லி பேரியல் அசுரப் சன்னதம் ஆடினவா.

இன்னொரு பக்கத்திலை ஜிகாத் ஆயுதக் குழுவை இயக்கிக் கொண்டிருந்த அத்தாவுல்லா, கக்கீம் மாத்தையாவின் ஆட்களின் நையப்புடைச்சு, தான் ஒரு பெரிய மாலீக் கபூர் என்கிற மாதிரி சண்டித்தனம் செய்து கொண்டிருந்தவர். இப்படியே ஆளாளுக்கு அடிபட, ரிசாத் பதியுதீன் இன்னொரு பக்கமாய் கிளம்பிப் போய் தானும் ஒரு தனிப் பெரும் முசுலிம் தலைவர் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தவர். கடைசியில் பேச்சுவார்த்தையில் முசுலிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யிறதுக்கு ஆட்கள் இல்லாமல் போக, முசுலிம் மக்களின் சார்பாக பீரிஸ் மாத்தையாவோடையும், மிலிந்த மொறகொடவோடையும் விடுதலைப் புலிகள் தான் கதைச்சவையள் என்றால் பாருங்கோவன் பிள்ளையள்.

அந்த நேரத்தில் எங்கடை தம்பி அன்ரன் பாலசிங்கம் நக்கலாக ஒரு கதையொண்டு சொல்லிச்சுதே பாருங்கோ. பேச்சுவார்த்தை முடிஞ்சதும் பத்திரிகையாளர் ஒருவர் தம்பி பாலசிங்கத்தை மறிச்சுக் கேட்டவர், 'இந்த முறை ஏன் பேச்சுவார்த்தைக் குழுவில் கக்கீம் கலந்து கொள்ளவில்லை?'

அதுக்கு தம்பி பாலசிங்கம் சொல்லிச்சுது: 'அவரின்ரை கட்சிக்குள்ளை பெரிய பிரச்சினை. அவரின்ரை தலைவர் பதவி எந்த நேரமும் பறிபோகலாம் என்று கதைக்கீனம்.

**அந்த நேரத்தில் எங்கடை தம்பி அன்ரன் பாலசிங்கம் நக்கலாக ஒரு கதையொண்டு சொல்லிச்சுதே பாருங்கோ. பேச்சுவார்த்தை முடிஞ்சதும் பத்திரிகையாளர் ஒருவர் தம்பி பாலசிங்கத்தை மறிச்சுக் கேட்டவர், இந்த முறை ஏன் பேச்சுவார்த்தைக் குழுவில் கக்கீம் கலந்து கொள்ளவில்லை?**

இந்த நேரத்திலை தன்ரை பதவியைத் தக்க வைக்கிறதா, முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்கிறதா என்ற நிலைமையில் ஆள் பேச்சுவார்த்தையும் வேண்டாம், தனி முஸ்லிம் பிரதிநிதித்துவமும் வேண்டாம் என்று கொழும்புக்கு ஓடிப் போய் விட்டார்.'

உதைக் கேட்டதும் பக்கத்திலை நின்ற பத்திரிகையாளர்மார் எல்லோரும் கொல்லென்று சிரிச்சவையள். அந்த அளவுக்கு அந்த நாட்களில் முசுலிம் அரசியல்வாதிகளின் ஒற்றுமை சந்தி சிரிக்கிற அளவுக்கு இருந்திச்சுது.

ஒன்று மட்டும் சொல்லுவன் பிள்ளையள். ரிசாத் பதியுதீன் பதவி விலகிறதாக இருந்தால், தாங்களும் பதவி விலகுகிறோம் என்று உந்த முசுலிம் அமைச்சர்மார் சொன்னதில் பல சூட்சுமங்கள் பொதிந்திருக்குது.

உவையள் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகினதெல்லாம் அப்பாவி முசுலிம் வாக்காளர்களை ஏமாற்றுகிறதுக்கும், தங்கடை நாடாளுமன்றக் கதிரைகளைத் தொடர்ந்தும் இறுகப் பற்றிக் கொண்டிருக்கிறதுக்கும் தான்.

இன்றைக்கு இலங்கையில் முசுலிம் மக்களுக்கு எதிராக சிங்கள-பௌத்த பேரினவாதம் வெறிகொண்டு தாண்டவம் ஆடுது. பள்ளிவாசல்களுக்கு கல் எறியிறாங்கள். திருக்குரானை எரிக்கிறாங்கள். முசுலிம் கடைகளுக்கும், வீடுகளுக்கும் தீவைக்கிறாங்கள். ஆனால் உதையெல்லாம் தடுத்து நிறுத்த வக்கில்லாத ரணில் மாத்தையாவின்ரை அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்துக் கொண்டு தான் உந்த முசுலிம் அமைச்சர்மார் இருந்தவையள்.

இப்பவும் அதே முண்டு கொடுப்புத் தான். அமைச்சுப் பதவிகளில் இருந்து தான் ஆட்கள் விலகியிருக்கீனமே தவிர, ரணில் மாத்தையாவின்ரை அரசாங்கத்தைக் காப்பாத்துகிறதில் தான் அவை குறியாய் இருக்கீனம்.

உந்த முசுலிம் அமைச்சர்மார் எல்லோருக்குமே தெரியும், ரணில் மாத்தையாவின்ரை அரசாங்கம் கவிண்டுது என்றால் தங்கடை கதை அம்பேல் தான் என்று. நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் என்று வந்தால் வெறிகொண்டு நிற்கிற சிங்கள-பௌத்த பேரினவாதம் இந்த முறை மகிந்த மாத்தையாவைத் தான் பிரதமர் சிம்மாசனத்தில் அமர்த்தும். கெஞ்சிக் கேட்டாலும் மகிந்தரின் அரசாங்கத்தில் தாங்கள் இணைய முடியாது என்று உந்த முசுலிம் அரசியல்வாதிகள் எல்லோருக்குமே நல்லாகத் தெரியும்.

அதைவிட மீண்டும் மகிந்தர் ஆட்சிக்கு வந்தாலோ, அதிபர் தேர்தலில் கோத்தபாய வெற்றிபெற்றாலே தங்களுக்கு சிங்கள-பௌத்த பேரினவாதம் பெரிய ஆப்பு



இறுக்கும் என்பதும் உவையளுக்கு நல்லாகத் தெரியும்.

அதுதான் ரணில் மாத்தையாவின்ரை அரசாங்கத்தைத் தக்க வைக்கிறதுக்கு ஆட்கள் துடியாய் துடிச்சுக் கொண்டிருக்கீனம். அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகினாலும், தாங்கள் ஆளும் கட்சியின் பின்வரிசையில் இருந்து கொண்டு ரணிலின் அரசாங்கத்தை ஆதரிப்பம் என்று ஆட்கள் சூளுரைத்திருக்கீனம் என்றால் பாருங்கோவன் பிள்ளையள்.

உதுக்குள்ளை முசுலிம் அரசியல்வாதிகளைப் பார்த்துத் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும் என்று உந்தக் கொலைவெறி பிடிச்ச ஈ.பி.டி.பி கும்பலின் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சொல்லியிருக்கிறாராம். உதைத் தான் 'சாத்தான் வேதம் ஓதுது' என்று எங்கடை ஊரிலை வெள்ளைக்காரனின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் அடிக்கடி சொல்லுவார்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று சொல்கிறதிலை நியாயம் இருக்குது தான் பிள்ளையள். ஆனால் அதுக்காக அடம்பன் கொடியோடை புடலங்காய் கொடி சேர்கிறதாலை மிடுக்கு வந்திடுமே பிள்ளையள்?

ஒற்றுமை என்கிறது ஒத்த கொள்கை உடையவர்களுக்கு இடையில் வர வேண்டியது பாருங்கோ. தமிழனை அழிக்கிற கொள்கையோடை இருக்கிறவனோடையும், தமிழனின்ரை கச்சையையும் விற்று வயிறு வளர்க்கிற கொள்கையோடை இருக்கிறவனோடையும், தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை என்று கொள்கைப் பிடிப்போடை இருக்கிற தமிழ்த் தேசியவாதிகள் ஒன்று சேர்கிறதாலை எந்த நன்மையும் கிடைக்காது.

உதை விளங்கித் தான் பன்றியோடு சேரும் கன்றும் ஏதோ தின்னுமாம் என்று அந்தக் காலத்தில் எங்கடை கொப்பாட்டன்மார் சொன்னவையள்.

ஏதோ, விளங்கிற ஆட்களுக்கு விளங்கினால் சரி.

வேறை என்ன பிள்ளையள்?

அடுத்த முறை சந்திப்பம்.

# முன்னாள் போராளிகள் மீது...

இந்த நிலையில், வழமையாக மாடு ஏற்றும் தொழிலில் ஈடுபட்டு வந்த முஹமது ஆசீம் சியாம், மாடு ஏற்றும் பாரவண்டியுடன் சென்று காவல் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் அன்றைய தினம் நின்றிருந்தார். பாரவண்டியில் சியாம் காத்திருந்துள்ளார். இந்த நிலையில், வேவு பார்ப்பதற்கு சோதனைச் சாவடிக்கு அருகில் சென்று திரும்பி வந்த இம்ரான், காத்திருந்த நில்கான், கபூர் ஆகியோரிடம் இரு காவல்துறையினர் நிற்பதாகத் தெரிவித்துள்ளளார்.

அப்போது பாரவண்டியைச் சோதனைச் சாவடிக்கு அருகில் கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டனர். அந்த பாரவண்டியிலிருந்து சியாம் இறங்கியதும், அந்தப் பாரவண்டி வவுணதீவு பிரதேசத்தை நோக்கிச் சென்றது. அந்தச் சந்தர்ப்பத்தில் மற்றுமொரு உந்துருளி அப்பகுதியூடாக வந்து கொண்டிருந்துள்ளது. அது மட்டக்களப்பு பகுதியை நோக்கி செல்லும் வரை சகலரும் காத்திருந்தனர்.

அதன் பின்னர், உந்துருளிகளில் நான்கு பேரும் சோதனைச் சாவடிக்கு அருகில் சென்று அங்கு உந்துருளிகளை நிறுத்திவிட்டு கபூரும், இம்ரானும் காவல் உத்தியோகத்தரான கணேஸ் தினேஸ்க்கு (இவரொரு தமிழர்) அருகில் சென்று பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு இருட்டான பகுதியில் நில்கானும் சியாமும் சென்று நின்றிருந்தனர். இதன்போது சோதனைச் சாவடியின் உட்பகுதியில் காவல்துறை சார்ஜனான நிரோசன் இந்திர பிரசன்னா நித்திரையில் இருந்துள்ளார்.



இந்தவேளை, நள்ளிரவு 2.40 மணிக்கு தினேஸ் உடன் இம்ரான் நன்றாக கதைத்துக் கொண்டிருந்த போது அங்கிருந்து கபூரும் இருட்டில் பதுங்கிருந்த நில்கானும் சோதனைச் சாவடி உள்பகுதில் படுத்திருந்த காவல்துறை சாஜன் இந்திக பிரசன்னாவின் முகம், கழுத்து பகுதியை வலையால் மூடினர். அப்போது, கத்தியால் கபூர் குத்தியுள்ளார். அவ்விருவர் மீதும் காவல்துறை சாஜன் திமிறியபடி உதைத்துள்ளார்.

இதன்போதே, வெளியிலிருந்த காவலர் தினேஸ்க்கு சத்தம் கேட்டுள்ளது. அவர் தன்னை ஆயத்தமாகி கொள்வதற்கு இடையில் அவரை லெக்போட்டு இம்ரான் பிடித்துக்கொண்டார். கத்தியால் சியாம் வெட்டியதையடுத்து அவர் கீழே வீழ்ந்து மயங்கியுள்ளார். இதன் பின்னர், காவல்துறை சாஜன் பிரசன்னாவை குப்புற போட்டுக்கொண்டு, நில்கான் கொண்டு சென்ற ரி-56 ரக துப்பாக்கியால், அவர் மீது இரண்டு தடவைகள், சுட்டுள்ளார். அதன்போது கபூர் அவர் மீது கத்தியால் 9 தரம் குத்தியுள்ளார். பின்னர் மயங்கிக் கிடந்த காவல்துறையினன் தினேஸின் இரண்டு கைகளையும் பின்னால் வைத்து கட்டிப்போட்டு அவர் மீது கத்தியால் தாக்குதல் நடாத்தி விட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

அதன்பின்னர் உடனடியாக காவல்துறையினரிடம் இருந்த கை துப்பாக்கிகள் இரண்டையும் எடுத்துக் கொண்டு வவுணதீவு ஊடாக கொக்கட்டிச்சோலை சென்று அங்கிருந்து மண்முனை பாலத்துக்கு

சென்றுகொண்டிருந்தபோது, ஒரு உந்துருளியின் சக்கரத்தின் காற்றுப் போயுள்ளதையடுத்து அதனை உருட்டிக் கொண்டு ஒல்லிக்குளப்பகுதியில் அமைத்திருந்த முகாமுக்கு சென்றனர்.

அங்கிருந்து காவல்துறையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கைத் துப்பாக்கி ஒன்றை நிந்தவூர் பகுதியில் புதைத்து வைத்ததுடன் மற்ற கைத் துப்பாக்கி உட்பட 6 கைத் துப்பாக்கிகளையும் புத்தளம் பகுதிக்கு எடுத்துசென்ற கபூர், அங்கு புதைத்து வைத்துள்ளார் என்று அந்தக் காவல்துறை அதிகாரி கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்திய ரி- 56 ரக துப்பாக்கியை சஹ்ரானின் தம்பியிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அதன் பின்னர் சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்த ஒருவரின் கைகளில் இருந்து அந்தத் துப்பாக்கியைப் படையினர் மீட்டுள்ளனர் என சி.ஐ.டி யினரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்தத் திட்டத்துக்கு தலைமை தாங்கிய நில்கான், சவூதி அரோபியாவுக்குச் செல்வதற்கான, விசா, விமான சீட்டு என்பவற்றை ஏற்கனவே ஒழுங்குபடுத்திவிட்டு வந்திருந்தமையால், தாக்குதல் நடத்தியகையுடன், சவூதி அரோபியாவுக்கு அவர் உடனடியாகத் தப்பிச் சென்றார். நில்கானை அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்த சி.ஐ.டியின் அதிகாரியொருவர், அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான இராஜதந்திர நடவடிக்கையில் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

# பார்வையற்ற தமிழ் அகதி தடுத்துவைப்பு அவுஸ்திரேலியா மீது ஐ.நா. குற்றச்சாட்டு

பார்வையற்ற மனோநிலை பாதிக்கப்பட்ட தமிழ் அகதியொருவரை ஒன்பது வருடங்களாக அவுஸ்திரேலியா தடுத்து வைத்திருப்பதற்கு தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள ஐநா குறிப்பிட்ட தமிழ் அகதியை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. ஐக்கிய நாடுகளின் குழுவொன்று இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. ஒரு தசாப்தகாலமாக சிறையில் வாடும் கண்பார்வையற்ற மனோநிலை பாதிக்கப்பட்ட தமிழ் அகதியை அவுஸ்திரேலியா உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என ஐநா தெரிவித்துள்ளது. ஒன்பது வருடங்களாக நபர் ஒருவரை தடுத்து வைத்திருப்பதன் மூலம் அவுஸ்திரேலியா சர்வதேச அகதிகள் சட்டங்களை மீறியுள்ளது என ஐ.நா. தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட தமிழ் அகதியை உடனடியாக விடுதலை செய்து அவரிற்கு இழப்பீடு உட்பட அனைத்து கொடுப்பனவுகளையும் அவுஸ்திரேலியா வழங்கவேண்டும் எனவும் ஐ.நா. கேட்டுக் கொண்டுள்ளது.



குமார் என அழைக்கப்படும் இந்த நபர் 2010ல் 27 வயதில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்கு தப்பிச்சென்றவர் என ஐ.நா. தெரிவித்துள்ளது. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது சித்திரவதைகள் உட்பட மனித உரிமை மீறல்களிற்கு ஆளானதால் குமார் அவுஸ்திரேலியா சென்றார் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

2010 டிசம்பரில் அவர் அகதி என அவுஸ்திரேலியா தீர்மானித்தது. ஆனால் கடந்த பத்து வருடங்களாக அவர் சிறையில் வாழ்கின்றார். சமீபத்தில் அவர் விலாவூட் தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளார் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

கண்பார்வையற்ற மூளையில் காயங்கள் உள்ள மனோநிலை பிரச்சினையுள்ள நபர் ஒருவரை தடுத்துவைப்பது ஜனநாயக நாடொன்றை பொறுத்தவரை ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என குமாரின் சட்டத்தரணி அலைசன் பட்டிசன் தெரிவித்துள்ளார். குமார் கண்பார்வையற்றவர் என்பதாலும் மூளையில் காயங்கள் உள்ளவர் என்பதாலும் அவரால் பாதுகாப்பு கரிசனைகள் காணப்படுகின்றன என தெரிவிப்பதை ஏற்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பான அனைத்து விபரங்களையும் ஆராய்ந்த பின்னர் குமாரை விடுதலை செய்வதே பொருத்தமான முடிவாகயிருக்கமுடியும் என கருதுவதாக ஐ.நாவின் குழு தெரிவித்துள்ளது.

# முள்ளிவாய்க்கால்...

70 ஆண்டுகாலமாக நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தினை நடத்தி வரும் தேசிய இனமாகிய ((Ethnic Nationalities) தமிழர்களை மதச் சிறுபான்மையினர்களாக (Religious Minorities) சுருக்கி அடையாளப்படுத்தும் வேலையினை இந்த கும்பல் செய்து வருகிறது.

தமிழர்கள் ஒரு தேசிய இனமல்ல என்று சொல்வதும், அதன் மூலமாக அங்கு நடைபெற்றது இனப்படுகொலை அல்ல என்று சொல்வதும் அமெரிக்கா–இந்தியா கூட்டணியின் திட்டமாக இருக்கிறது. இதன் காரணமாகத் தான் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானங்கள் தொடர்ச்சியாக தமிழர்களை மதச் சிறுபான்மையினர் என்று குறிப்பிட்டது.

அதனை எதிர்த்து உலகத் தமிழர்கள் பலரும் குரல் எழுப்பி வரும் நிலையில், அமெரிக்கா – இந்தியக் கூட்டணியின் இனப்படுகொலையை மறைக்கும் சதி வேலையினைத் தான் அர்ஜுன் சம்பத் போன்றவர்கள் செய்து வருகிறார்கள். தமிழர்களின் இனப்படுகொலைக்கு நீதி பெறுவதினை தடுப்பது இவர்களின் நோக்கமாக இருக்கிறது. இந்துத்துவ கும்பல்கள், அடிப்படையிலேயே தமிழின விரோத சக்திகளாகவே இருக்கின்றன.

தமிழீழ போராளிகள் இருந்தவரை அம்மண்ணில் நிலை பெற முடியாத மதவெறிக் கருத்துக்களை இப்போது இந்தியாவின் துணையுடன் இந்துத்துவ கும்பல்கள் அம்மண்ணில் விதைக்க நினைக்கின்றன. மாலதி படையணியும், சூசை கடற்படையும், இம்ரான் படையணியும் இணைந்து களமாடிய தேசமது. அங்கே தமிழின விரோத இந்துத்துவ கும்பல்களை அனுமதிப்பது சீரழிவையே கொடுக்கும். தமிழீழ விடுதலைக் கோரிக்கையை அழிப்பதே இவர்களின் நோக்கம். ஈழத் தமிழர்களே! எச்சரிக்கை கொள்ளுங்கள். தமிழின விரோத இந்துத்துவ மதவெறி கும்பல்களை தமிழீழ மண்ணிலிருந்து அப்புறப்படுத்துங்கள். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவலச் சாவுகளும்...

வேகமாக வந்த உந்துருளி சருகுபுலியை மோதித் தள்ளி தடம்புரண்டு வீதி மருங்கிலிருந்த மைல் கல்லில் சென்று மோதியுள்ளது. இதனால் இளைஞர்கள் இருவரும் பலியாகியுள்ளனர். இதேவேளை உந்துருளியில் மோதுப்பட்ட சருகுபுலியும் அங்கு இறந்து கிடந்துள்ளது.

### முல்லைத்தீவில் வாகன விபத்தில் இருவர் பலி

முல்லைத்தீவு மாங்குளம் முறிகண்டி பிரதேசத்தை அண்மித்த செல்வபுரம் ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர். குறித்த சம்பவம் கடந்த முதலாம் திகதி மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றள்ளது. கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் தனியார் ஆடை தொழிற்சா–லைக்கு வேலைக்கு சென்று உந்துருளியில் திரும்பிக்கொண்டிருந்த வேளை, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்தின் பின்புறமாக மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த பேருந்துத் தரிப்பிடமற்ற பகுதியில் சடுதியாக தரிக்க முற்பட்டபோது, அதிக வேகமாக பயணித்த உந்துருளி மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் உந்துருளியில் பயணித்த ஊற்றுப் புலத்தைச் சேர்ந்த தனுசன் (வயது–19), தயாளன் (வயது–19) ஆகிய இரு இளைஞர்களுமே உயிரிழந்துள்ளனர். இவர்கள் கிளிநொச்சி, அறிவியல் நகர் பகுதியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் என்று தெரிவிக்கப்படுன்றது. அண்மையில் கொள்வனவு செய்திருந்த உந்துருளியில் அவர்கள் கிளிநொச்சி நோக்கிப் பயணித்தபோதே விபத்தில் சிக்கியுள்ளனர்.

### கார் மரத்துடன் மோதி வயோதிபப் பெண் பலி

வவுனியா ஓமந்தை பகுதியில் கடந்த 30ம் திகதி மதியம் 3.10 மணியளவில் கார் ஒன்று மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படு காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார். மரணடைந்தவர் முன்னாள் பாடசாலை அதிபரான வையாபுரிநாதனின் மனைவியான 68 வயதான திலகவதி என்பவரே மரணமடைந்துள்ளார். இதேவேளை காமடைந்த மூவரில் ஒருவர் அனுராதபுரத்திற்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சியில் தொடருந்து மோதி முதியவர் பலி

கிளிநொச்சி இரணைமடுசந்தியில் கடந்த 26ம் திகதி இடம்பெற்ற தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரணைமடு பகுதியை சேர்ந்த இராசேந்திரம் எனும் 62 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தவராவர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த இரவு நேர தபால் தொடருந்துடன் இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது. உடலின் மேற்பகுதி வேறாகவும், இடுப்புக்கு கீழ் பகுதி வேறாகவும் காணப்பட்டது.

ஒரு கதை

## மரியாதை



ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர்க்கு சற்று கர்வம் அதிகம். ஊர்க்காரர்களுடன் சகஜமாகப் பழகமாட்டார். நிறைய வசதிகள், வேலையாட்கள், நிலபுலன்கள் இருந்தாலும் யார் வீட்டுக்கும் நல்லது கெட்டது எது நடந்தாலும் போக மாட்டார்.

ஊரில் பெரிய செல்வந்தராயிருப்பதால் ஊர்க்காரர்கள் தங்கள் வீட்டு நல்லது, கெட்டதற்கு அவருக்கு அழைப்பு விடுப்பர். ஆனால் அவர் தனக்கு பதில் அவருடைய கைத்தடியை ஓர் ஆள் மூலம் கொடுத்தனுப்பி அந்த வீட்டில் வைப்பார். அவர் வந்ததாக நினைத்துக் கொண்டு மற்ற காரியங்களை அந்தக் கிராமத்தில் உள்ளவர்கள் செய்வார்கள்.

இப்படியே பல காலம் கடந்தது. அக் கிராம மக்கள் அவரை எதிர்த்துப் பேச முடியாமலும், அதேசமயத்தில் அவரது தலைக்கனத்தை அகற்றவும், அவருக்கு நல்ல புத்தி புகட்டவும், தக்க சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். திடீரென செல்வந்தருக்கு உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாகிவிட்டார். கிராமத்தில் யாரும் கண்டு கொள்ளவில்லை. அவருடைய பணியாட்கள்கூட அவர்மீது அக்கறையில்லாமல் நடந்துகொண்டார்கள்.

ஒருநாள் அவர் இறந்துவிட்டதாக பொய்யான தகவலைச் சிலர் பரப்பி, அவருக்கு பாடம் புகட்டத் தயாரானார்கள்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

ஒரு விதை

### தியாகி பொன்.சிவகுமாரனின் 45வது நினைவு

## காவல்துறையினனைக் கொல்லாது தன் உயிரை மாய்த்த மாவீரன்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் சாவை அணைத்துக்கொண்ட வீரன் தியாகி பொன்.சிவகுமாரன். உரும்பிராயில் 1950 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் நாள் பொன்னுத்துரை அன்னலட்சுமி இணையருக்கு மூன்றாவது மகனாக சிவகுமாரன் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்றவர். அந்தக் காலகட்டத்தில்தான் இலங்கையில் கல்வித் தரப்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார். 1970களின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சோமவீர சந்திரசிறீயின் வாகனத்துக்கு குண்டு வைத்தவர் சிவகுமாரன் என்று குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.



**பொன்.சிவகுமாரன்**
**( யாழ்ப்பாணம் உரும்பிராய்)**
**26.08.1950 - 05.06.1974**

1971ம் ஆண்டு தொடக்கத்தில் யாழ்ப்பாண நகரத் தந்தையாகவும் அப்போது சிறிமா கட்சியின் அமைப்பாளராகவும் இருந்த அல்பிரட் துரையப்பாவுக்கு குறிவைத்து அவரது வாகனத்தில் குண்டு பொருத்தினார். குண்டுவெடித்து சிதறி வாகனத்தின் மேல்பக்கம் எல்லாம் பெருந்தொலைவுக்குச் சென்று விழுந்தது. ஆனால் துரையப்பா...

தொடர்ச்சி 18ம் பக்கம்

ஒரு குறள்

அறத்துப்பால் – கூடாவொழுக்கம்



மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

**உலகத்தாரின் பழிப்புக்கு உள்ளாகும் செயல்களைத் துறக்காமல் ஒரு துறவி, தனது தலையை மொட்டையடித்துக் கொண்டோ, சடாமுடி வளர்த்துக் கொண்டோ கோலத்தை மட்டும் மாற்றிக் கொள்வது ஒரு ஏமாற்று வித்தையே ஆகும்.**

ஒரு மருத்துவம்

### 25 கோப்பி குடித்தாலும் ஆபத்து இல்லை!

ஒரு நாளைக்கு 25 கோப்பை கோப்பி குடித்தால் கூட இருதயத்திற்கு எந்தக் கேடும் வராது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முன்பு கோப்பி குடிப்பது இதய நோயை வரவழைக்கும் என்று கருதப்பட்டது. இருதயத்திற்கு சுவாசக் காற்றை உட் கொண்ட இரத்தத்தை செலுத்தும் நாளங்கள் இறுக்கமடைவதாகவும் இதன் காரணமாகத் திடீரென மாரடைப்பு ஏற்படக் கூடும் என்றும் முன்பு கருதப்பட்டது.



ஆயினும் கோடிக் கணக்கான மக்கள் ஒவ்வொரு நாளும் பலமுறை கோப்பி அருந்துகின்றனர். இந் நிலையில், 8 ஆயிரம் பேரை தேர்வு செய்து இலண்டன் குயின் மேரி பல்கலைக்கழகம்ஆய்வுமேற்கொண்டது. தினமும் ஒரு கோப்பை கோப்பி அருந்துபவர்கள்,மூன்று கோப்பைவரைஅருந்துபவர்கள், பல முறை அருந்துபவர்கள் என பிரித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது, யாருடைய உடலிலும் கோப்பி எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தகவல்

## பிரத்தியேக பாதுகாப்புப் படை

உலகிலேயே மிகச் சிறிய பெங்குவின்கள் அவுஸ்திரேலியாவில் உள்ள மிடில் தீவில் வசிக்கின்றன. இவை ஓர் அடி உயரமும், ஒரு கிலோ நிறையும் கொண்டவை. ஓரிடத்தில் கூட்டமாக வசிக்கும் இயல்புடையவை. பெங்குவின்களை நரிகள் வேட்டையாடுவதால் அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டன. 15 ஆண்டுகளுக்கு முன்பு 800 பெங்குவின்கள் இங்கே இருந்தன. 10 ஆண்டுகளுக்கு முன்பு 4 பெங்குவின்களே எஞ்சியிருந்தன. இவற்றைக் காப்பாற்றுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றும் பலனளிக்கவில்லை. அவுஸ்திரேலியாவில் கோழிகள், ஆடுகளைக் காப்பாற்றுவதற்கு நாய்களைப் பயன்படுத்துவதுண்டு. 2006ம் ஆண்டு நாய்களை அனுப்பி, பெங்குவின்களை காக்கும் முடிவுக்கு வந்தனர். நரிகள் வரும் வழிகளில் நாய்களை நிறுத்திவிடுவோம். நாய்களின் குரைப்புக்குப் பயந்துகொண்டே நரிகள் நெருங்கி வருவதில்லை. திங்கள் முதல் வெள்ளி வரை நாய்கள் பெங்குவின்களை காக்கும் பணியில் ஈடுபடுகின்றன. நாய்களின் வாசம் அங்கேயே இருப்பதால் சனி, ஞாயிறுகளிலும் நரிகள் எட்டிப் பார்ப்பதில்லை. 9 ஆண்டுகளில் நரிகளால் ஒரு பெங்குவினைக் கூட வேட்டையாட முடியவில்லை. இன்று பெங்குவின்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்திருக்கிறது. பெங்குவின்களை காப்பாற்றும் நாய்களின் கதை Oddball என்ற பெயரில் ஹொலிவுட் திரைப்படமாக வெளி வந்திருக்கிறது.




ஒரு பொன்மொழி

**தாயின் அன்பை வெளியிட உலகத்தில் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை.**

- சோபின்


ஒரு பழமொழி

**தலைகுனிந்து நிற்கும் கதிரில்தான் அதிகதானியம் இருக்கும்**

(பல்கேரிய பழமொழி)

ஒரு வரலாறு

## நெருங்க முடியாத மரணம்



தன்னை எதிர்ப்பவர்களை அழித்துவிட்டு மறுவேலை பார்ப்பது அமெரிக்காவின் கொள்கை. அமெரிக்காவின் இந்தக் கொலைக் கரத்தில் இருந்து தப்புவது அத்தனை இலகுவல்ல. உலகப் புரட்சியின் நாயகன் சே குவேரா கூட தப்பித்துக்கொள்ள முடியாத அந்தக் கரங்களில் இருந்து தப்பித்துக்கொண்ட ஒருவரென்றால் அது கியூபாவின் தலைவர் பிடல் கஸ்ரோ தான். பக்கத்தில் ஒரு குட்டித் தீவில் இருந்து கொண்டு அமெரிக்காவிற்கு அவர் கொடுத்த குடைச்சல், அவரை கொன்று ஒழித்து தங்கள் இரத்த வெறியை தீர்க்க வேண்டும் என்ற வைராக்கியத்தை அமெரிக்காவிற்கு ஏற்படுத்தியது. 1960க்கு பிறகு பதவியேற்ற அனைத்து அமெரிக்க அதிபர்களும், இவரைக் கொல்வதை தங்களது அரசியல் செயல்பாடுகளின் ஒரு பகுதியாகவே கொண்டிருந்தனர். பொருளாதார வசதியோ, உலகளாவிய அரசியல் அதிகாரமோ இல்லாத ஒரு சிறிய தீவின் தலைவரை கொல்ல வல்லரசு நாடான அமெரிக்கா தொடர்ந்து முயன்றது என்பது அதிர்ச்சி தகவல். ஆனால் அதுதான் உண்மை. ஆனால் தன்னை கொல்ல முயன்ற 10 அமெரிக்க அதிபர்களின் பதவிக்காலம் முடிந்த பிறகும் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாகவே விளங்கினார் பிடல் கஸ்ரோ. அமெரிக்கா 638 முறை பிடல் கஸ்ரோவை கொல்ல செய்ய முயற்சி செய்துள்ளது. அவருக்கு பிடித்தமான சுருட்டு, மருந்து மாத்திரைகள், உணவுப்பொருட்கள் ஆகியவற்றில் விசம் கலந்து கஸ்ரோவை கொலை செய்ய முயன்றுள்ளது. இன்னும் சொல்லப்போனால் கஸ்ரோவின் தாடியில் இரசாயனத்தை கலந்து உடலுக்குள் செலுத்தும் முயற்சியும் நடந்தன. ஆனால் இறுதி வரை அது முடியவில்லை. இறுதியில் இயற்கை மரணமே பிடல் கஸ்ரோவை நெருங்க முடிந்தது. அமெரிக்க அதிபர்களுக்கும், அதன் உளவு அமைப்புகளும் முகத்தில் கரியை பூசி, அந்த புரட்சி நாயகனுக்கு இயற்கை ஓய்வை கொடுத்தது.

ஒரு ஒரு படமும் விளக்கமு



நீரின்றி அமையாது
உலகு
ஒரு துளி நீரும்
உயிர் வாழப் போதும்
நீருக்காய் மூன்றாம்
உலகப் போருக்கு
வழியின்றி
வரும்
தலைமுறையும்
உயிர்வாழ
தண்ணீரைக்
காத்திட
இப்போதே நீர்
காக்கும் போரைத்
தொடங்குவோம்...

# இலங்கைத் தீவில் 3ம்...

இலங்கைத் தீவில் ஆதிக்குடிகள் தமிழ் மக்கள் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. இந்த தொல்லியல் வரலாற்று உண்மையை சிங்களவர்கள் கூட நிராகரிக்க முடியாதவர்களாக உள்ளனர். இந்த ஆதிக்குடிகளாக, ஆதிக்கம் செலுத்த வேண்டிய தமிழினம் தற்போது மூன்றாம் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றமை மிகவும் வேதனையானது.

முஸ்லிம்களின் இனப்பெருக்க வீதம் வேகமாக அதிகரித்துள்ளது. கடந்த இரு தசாப்த காலத்தில் தமிழ் மக்களின் பிறப்பு வீதம் சடுதியாகக் குறைந்துள்ள நிலையில், முஸ்லிம்கள் இன விகிதாசாரத்தில் முன்னோக்கிய நிலையை அடைந்துள்ளனர். தற்போது நாட்டில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 22 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

கடந்த 1989 ஆம் ஆண்டு சிறீலங்காவின் சனத்தொகைக் கணக்கெடுப்பில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 21 இலட்சத்து 24 ஆயிரமாகவும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 12 இலட்சத்து 49 ஆயிரமாகவும் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 22 இலட்சத்து 70 ஆயிரமாகவும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 18 இலட்சத்து 69 ஆயிரமாகவும் உயர்ந்தது.

13 ஆண்டுகளில் தமிழர்களின் சனத்தொகை 1 இலட்சத்து 46 ஆயிரத்தால் மட்டுமே உயர்ந்தது. ஆனால், முஸ்லிம்கள் 6 இலட்சத்து 20 ஆயிரம் பேரால் உயர்ந்தனர். தற்போது தமிழ் மக்களின் எண்ணிக்கை வெறும் 32 இலட்சத்து 10 ஆயிரமாக உள்ளது. முஸ்லிம்களின் எண்ணிக்கை 22 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இன்னும் பத்தாண்டுகளில் மலையகத் தமிழர்களைத் தவிர்த்து, இரண்டாவது பெரிய இனமாக முஸ்லிம்கள் வந்துவிடக் கூடிய ஆபத்து உள்ளது.



தமிழ் மக்களோ தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளோ இந்த விடயத்தில் எந்த அக்கறையும் எடுத்துச் செயற்படவில்லை. தத்தமது சுகபோக வாழ்விற்காகவே அவர்கள் அரசியலில் இருக்கின்றனர். நாட்டில் உள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கை கூட அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சனத்தொகையைப் பெருக்குவதற்கான எந்தவொரு செயற்பாடும் அவர்களிடம் இல்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே சிறீலங்கா தமிழர்களின் அரசியல் இராஜதந்திரம் நகர்ந்துகொண்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் மார்க்கத் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு ஆண் நான்கு திருமணங்கள் செய்ய வேண்டும். அதை அவர்கள் நேர்த்தியாகச் செய்து தமது இனத்தைப் பெருக்கி வருகின்றனர். தமிழ்ச் சிறுமிகள் உட்பட தமிழ்ப் பெண்களைக் கடத்திச் சென்று அவர்களை மதம் மாற்றித் திருமணம் செய்கின்றனர். சில தமிழ்ப் பெண்கள் குழந்தைகளுடன் கைவிடப்பட்டிருக்கின்றனர்.

சிறீலங்காவில் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான சூழ்ச்சிகளிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டு வருகின்றனர். தாம் நடத்துகின்ற உணவகங்கள், விடுதிகளில் தமிழ் மக்களுக்கு கருத்தடை மாத்திரைகள் கலக்கப்பட்ட உணவுகளைப் பரிமாறுகின்றனர் என்ற விடயம் நீண்ட காலமாகவே பேசப்பட்டது. ஏப்ரல் 21 குண்டு வெடிப்பு அதன் உண்மையை உணர்த்தியிருக்கின்றது. முஸ்லிம் பயங்கரவாதிகளின் தங்குமிடங்களில் பெரும் எண்ணிக்கையில் கருத்தடை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மேலும், கிழக்கில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் தன்னை அடையாளம் மாற்றி, அர்ச்சகருக்கு உதவியாளராக நின்ற முஸ்லிம் ஒருவர் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளைக் கலந்து பக்தர்களுக்கு வழங்கினார் என மக்கள் தெரிவித்துள்ளனர். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறு தமிழ் மக்களின் சனத்தொகையைக் குறைத்து தமது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முஸ்லிம்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், தமிழ் மக்கள் பேசா மடந்தைகளாக இருப்பது அவர்களைப் படுகுழிக்குள் தள்ளும்.

விடுதலைப் போராட்டம் காரணமாக மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் தங்களை மாவீரர்கள் ஆக்கியிருக்கின்றனர். இது தமிழினத்தைப் பொறுத்தவரை பெரும் இழப்பு. தமிழ் இனப்பெருக்க வீதத்தில், தமிழ் மக்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைந்தமைக்கு இதுவே முக்கிய காரணம். யுத்த காலத்தில் தமிழ் இளைஞர் - யுவதிகள் திருமணம் செய்வதில் அக்கறை காட்டவில்லை. போராட்டத்திலேயே அக்கறை செலுத்தினர்.

மேலும் சிங்கள தேசத்தின் திட்டமிட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாகவும் தமிழ் மக்களால் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. யுத்தம் இடம்பெற்ற முப்பது ஆண்டுகளில் முஸ்லிம்களின் இனப்பெருக்க வீதம் சடுதியாக அதிகரித்தது. இதனால் அவர்கள் தற்போது சிறீலங்காவின் இரண்டாம் மக்கள் தொகையை எட்டும் நிலைக்கு வந்திருக்கின்றனர்.

தற்போது, தாயகத்தில் கிராமப் புறங்களில் கூட பொருளாதார நெருக்கடி காரணமாக பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும் வீதம் குறைந்து செல்கின்றது. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் 10 குழந்தைகளுக்கு மேல் வரை பெற்றனர். பெரும்பாலும் கிராமப்புறங்களில் ஒரு குடும்பம் ஐந்து குழந்தைகளுக்கு மேல் பெற்றிருப்பர். ஆனால், இப்போது இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றெடுக்கும் தாய்மாரைக் காணமுடியவில்லை.

இந்த விடயத்தில் புலம்பெயர் தமிழர்கள் அதிக அக்கறை செலுத்த வேண்டும். தாயகத்தில் தமிழ் மக்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதை நீங்கள் ஊக்குவிக்கவேண்டும். புலம்பெயர் தேசத்தில் உள்ள அதிகமான தமிழ் மக்கள் ஈழத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தைக் காரணம் காட்டியே புலம்பெயர்ந்தவர்கள். இதனால் அவர்கள் இந்தப் பெரும் பணியைச் செய்ய முடியும்.

மூன்றாவது குழந்தை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அப்பிள்ளைகளை வளர்ப்பதற்கான செலவை மாதாந்தம் வழங்க வேண்டும். புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் ஒவ்வொரு தமிழரும் அல்லது ஒவ்வொரு குடும்பமும் அங்கு வீணே களியாட்டங்களுக்கு செலவிடும் பணத்தில் குறிப்பிட்ட தொகையை மீதப்படுத்தி தாயகத்தில் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவை ஈடுசெய்ய முடியும்.

இந்த விடயத்தில் அக்கறை செலுத்தத் தவறினால், இன்னும் இரு தசாப்பதங்களுக்குள் இலங்கைத் தீவில் முஸ்லிம்கள் இரண்டாவது பெரிய இனம் என்ற இலக்கை எட்டிவிடுவர் என்பது திண்ணம். இந்த எச்சரிக்கை மணி ஓசை அனைத்துலகில் வாழும் ஒவ்வொரு தமிழர்களின் காதுகளிலும் விழவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

# கோத்தபாய களமிறக்கிய....

தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் பத்திரமாக இருப்பதாக கதிர்காமத்தம்பி அறிவழகன் என்ற பெயரில் 22.05.2009 அன்று தமிழ்நெற் இணையத்தளத்தின் ஊடாக அறிக்கை வெளியிட்டதன் மூலம் உலகத் தமிழர்களிடையே பிரபல்யமானவர் இவர்.

தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையின் வெளியகப் பணிப்பிரிவுப் பொறுப்பாளர் என்று அறிமுகம் செய்ததன் மூலம் தான் பொட்டு அம்மானுக்கு அடுத்த நிலையில் பணிபுரியும் ஒரு மூத்த தளபதி என்ற பிம்பத்தை வெளிநாடுகளில் இருந்த போராளிகளின் மத்தியிலும், உலகத் தமிழர்களிடையேயும் விநாயகம் அவர்கள் உருவகித்திருந்தார்.

கதிர்காமத்தம்பி அறிவழகன் என்ற பெயரில் 22.05.2009 அன்று தமிழ்நெற் இணையத்தளத்திற்கு விநாயகம் அவர்கள் அறிக்கை அனுப்பி வைத்ததன் பின்னணியில் இன்னுமொரு சுவாரசியமான கதையும் உண்டு. அதை இவ்விடத்தில் சுருக்கமாகப் பதிவு செய்கிறோம். உண்மையில் அறிவழகன் என்ற பெயரில் தமிழ்நெற் இணையத்திற்கு விநாயகம் அறிக்கை அனுப்பியிருந்தாலும், இதனை எழுதியவர் அவர் அல்ல. அப்பொழுது இந்தியாவில் தங்கியிருந்த புகழேந்தி மாஸ்டர் என்பரே அதனை எழுதினார். பின்நாட்களில் அருணன் என்ற பெயரில் அறியப்பட்டு, புலம்பெயர் தேசங்களில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த இவரே, விநாயகம் வெளியிட்ட அறிக்கையின் நதிமூலம் ஆவார்.

இவ் அறிக்கையை தமிழ்நெற் இணையத்திற்கு விநாயகம் அனுப்பி வைத்த தருணத்தில் வவுனியா செட்டிக்குளத்தில் இயங்கிய தடுப்பு முகாம் ஒன்றில் தங்கியிருந்த விநாயகத்தின் குடும்பத்தினரை சிங்களப் புலனாய்வாளர்கள் அடையாளம் கண்டிருக்கவில்லை. ஆனால் விநாயகம் அவர்கள் அறிக்கை வெளியிட்ட சில நாட்களில் தவேந்திரன் ஊடாக அவரது குடும்பத்தினரை அடையாளம் கண்ட சிங்களப் புலனாய்வாளர்கள், அவர்களைப் பணயக் கைதிகளாக்கி விநாயகத்தைத் தமது கைப்பாவையாக மாற்றினார்கள்.

**கதிர்காமத்தம்பி அறிவழகன் என்ற பெயரில் 22.05.2009 அன்று தமிழ்நெற் இணையத்தளத்திற்கு விநாயகம் அவர்கள் அறிக்கை அனுப்பி வைத்ததன் பின்னணியில் இன்னுமொரு சுவாரசியமான கதையும் உண்டு. அதை இவ்விடத்தில் சுருக்கமாகப் பதிவு செய்கிறோம்.**

அவ்வேளையில் தவேந்திரன் ஊடாக விநாயகம் அவர்களுக்கு கோத்தபாய ராஜபக்சவால் ஒரு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. தலைமைச் செயலகம் என்ற காகிதப்புலிக் கட்டமைப்பிற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளையும், தமிழ்த் தேசிய அமைப்புக்களையும் கொண்டு வருவதற்கும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கானல் நீர் சாம்ராச்சியத்தை உருவாக்குவதற்கும் கே.பி எடுக்கும் முயற்சிகளுக்கு விநாயகம் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கினால், அவரது குடும்பத்தினர் விடுதலை செய்யப்படுவார்கள் என்பது தான் அந்த உத்தரவாதம்.

இது தான் விநாயகத்தை ஆட்டநாயகனாகக் கொண்டு கோத்தபாய ராஜபக்ச வகுத்த பிளான் பி. இதற்கு விநாயகம் அவர்களும் இணங்கினார்.

இதன் முதற்கட்டமாக நெடியவன் அவர்களின் தலைமையிலான அனைத்துலகத் தொடர்பகப் போராளிகளை அணுகிய விநாயகம், கே.பியின் தலைமையை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களை வற்புறுத்தினார். அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ளத் தவறினால் ஏனைய போராளிகளால் அனைத்துலகத் தொடர்பகப் போராளிகள் அந்நியப்படுத்தப்படுவார்கள் என்று விநாயகம் அவர்கள் எச்சரிக்கை செய்தார். அதாவது எதிரியை ஒதுக்கி வைத்து வேறுபாடு காட்டி மடக்கும் பேதம் என்ற கௌடில்யரின் யுக்தியை கனக்கச்சிதமாக விநாயகம் அவர்கள் செயற்படுத்தினார்.

அத்தோடு மட்டும் விநாயகம் அவர்கள் நின்று விடவில்லை. எதிரி மீது வன்முறைப் பிரயோகம் செய்து அடிபணிய வைக்கும் தண்டம் என்ற கௌடில்யரின் யுக்தியையும் சமநேரத்தில் விநாயகம் கையாண்டார்.

இவை பற்றி நாம் விரிவாகப் பார்ப்பதற்கு முன், இறுதி யுத்தத்தின் தலைவிதியை மாற்றியமைக்கக்கூடிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றுக்காக தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொழுது, வவுனியாவில் உள்ள காட்டுப்புறத்தில் விநாயகம் அவர்கள் அரங்கேற்றிய சிறுபிள்ளைத்தனமான செய்கை ஒன்றை இப்பத்தியில் நாம் பதிவு செய்வது பொருத்தமானது.

அதை அடுத்த இதழில் பார்ப்போம்.

*(மடையுடைப்புத் தொடரும்)*

# விண்வெளிப் போருக்கு ரஷ்யா தயாராகின்றதா?

விண்வெளிப் படைப்பிரிவை உருவாக்குவதில் அமெரிக்க அதிபர் டிரம்ப் தீவிர நாட்டம் காட்டிவருகின்றார். அடுத்த தலைமுறைக்கான போர் விண்வெளியை மையப்படுத்தியே இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டு வரும் நிலையில், தரை, வான், கடல் பாதுகாக்கப்படுவது போன்று விண்வெளியையும் பாதுகாக்க ஒரு படையை அமைக்கப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட்



டிரம்ப் அண்மையில் அறிவித்திருந்தார். அமெரிக்கப் படையில் தற்போது 5 கட்டமைப்புக்கள் இருக்கிறன. தரைப் படை, விமானப் படை, கடலோரக் காவல்படை, 2 கடற்படை ஆகியவை. இந்த படைகள் மட்டும் இல்லாமல் இதனுடன் ஆறாவதாக ஸ்பேஸ் ஃபோர்ஸ் (Space Force) எனப்படும் விண்வெளிப் படையை உருவாக்க இருப்பதாகவும் டொனால்ட் டிரம்ப் கூறியிருந்தார்.

இதற்கான திட்டங்களை நீண்ட நாட்களாக உருவாக்கியதாக கூறிய அவர், இதற்கான செலவு எவ்வளவு ஆகும் என்றும் கணக்கிட்டுள்ளார். இந்த விண்வெளி படையை உருவாக்குவதன் மூலம் பூமியில் சிறந்த




பலம் பொருந்திய நாடாக இருக்கும் அமெரிக்கா விண்வெளியிலும் சிறந்த பலம் பொருந்திய நாடாக மாறும் என்றும் அவர் கூறியிருந்தார். மனதில் பெரிய திட்டங்களை வைத்துக் கொண்டு இதை உருவாக்கியதாக டிரம்ப் கூறினார்.

இப்போது உலக நாடுகள், தனியார் நிறுவனங்கள் விண்வெளி துறையில் சிறந்து விளங்குகிறன. அவர்கள் எதிர்காலத்தில் அமெரிக்காவுடன் பிரச்சனை செய்யலாம். அதேபோல் எங்காவது ஒரு கோளில் இருந்து புதிய உயிரினம் நம் மீது போர் தொடுக்கக்கூட வரலாம். இதை எல்லாம் தடுக்கத்தான் இந்த விண்வெளி படையை உருவாக்க இருப்பதாகவும் டிரம்ப் விளக்கம் அளித்திருந்தார்.

மற்ற படைகளுக்கு மிகவும் பயிற்சி அளித்து ஆட்களை எடுப்பது போலவே இதற்கும் ஆட்களை எடுக்க இருக்கிறார்கள். ஆனால் இவர்கள், சாதாரண பயிற்சிகளை பெறாமல் புதிய பயிற்சிகளை பெறுவார்கள். இவர்களுக்காக புதிய ஆயுதங்கள் உருவாக்க வேண்டும், புதிய தொழில்நுட்பம் மூலம் இந்த மொத்தப் படையும் வடிவமைக்கப்படும் என்று டிரம்ப் கூறியிருந்தார்.

ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. இப்போதைக்கு விண்வெளிப் படையை உருவாக்கும் எண்ணமெல்லாம் இல்லை என்று கூறியது. அதன்படி பூமியில் இருக்கும் ஐந்து படைகளிலும் தன்னிறைவு பெற்று, போர் பயம் சென்ற பின் விண்வெளிப் படை குறித்து யோசிக்கலாம் என்று கூறி டொனால்ட் டிரம்பின் திட்டத்திற்கு தடை போட்டது. அதேபோல் செனட் சபையும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

இந்நிலையில், ரஷ்யா ஏற்கனவே விண்வெளிப் போருக்குத் தயாராகிவிட்டதா என்ற அச்சத்தை ஏற்படுத்தும் அளவிற்கு, விண்வெளித் தாக்குதலுக்கான ஏவுகணைகளை அது தயாரித்து வைத்திருப்பதும் அவற்றை விமானங்களில் இருந்தே விண்வெளிக்கு ஏவி தாக்குதல் நடத்தும் பலத்துடன் இருப்பது குறித்தும் அமெரிக்காவின் புலனாய்வுக் கட்டமைப்புக்கள் கண்டறிந்துள்ளன.

ரஷ்ய போர் விமானமான மிக்–31 ஒன்றில் முன் எப்போதும் காணப்படாத ஒரு நவீனரக ஏவுகணை பொருத்தப்பட்டிருந்தது நிழற்படம் ஒன்றின் மூலம் தெரியவந்தது. ஆரம்பத்தில் அதுவொரு சாதாரண ஏவுகணையாக இருக்கக்கூடும் என்றே எண்ணப்பட்டது. ஆனால், தற்போது வெளியான தகவலின்படி அந்த ஏவுகணை ஆனது ஒரு செயற்கைகோள் எதிர்ப்பு ஆயுதமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## பிரான்சில் ஒரு விசித்திர வழக்கு!

பிரான்ஸ் நாட்டில் அதிகாலையில் சேவல் கூவுவது பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதா? இல்லையா? என்பதை நீதிமன்றம் விசாரிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரான்சின் மேற்கு கடற்கரை அருகே உள்ள Saint-Pierre-d'Oléron பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் அதிகாலையில் சேவல் கூவுவது தனக்கு இடையூறாக இருப்பதாக பக்கத்து வீட்டைச் சேர்ந்த பெண் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிகளுக்கே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிமன்றம், எதிர்வரும் யூலை 4ம் திகதி விசாரணைக்கு முன்னிலையாகும்படி அந்த பெண்ணுக்கு கடிதம்



அனுப்பியுள்ளது. சேவல் பிரான்ஸ் நாட்டுச் சின்னம் என்பதால் இந்த வழக்கு பலரதுகவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிலையில் வழக்கு தொடர்ந்தவர் Saint-Pierre-d'Oléron இல் உள்ள தனது சொகுசுப் பங்களாவில் விடுமுறையை கழிக்க வந்தவர்.

இதுகுறித்து பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் கூறுகையில், நான் இங்கு 35 ஆண்டுகளாக வசித்து வருகிறேன், அவர்கள் ஆண்டிற்கு இருமுறை வருபவர்கள், என்றார். பெரும் செல்வந்தர்கள் கிராமப்புறங்களில் இதுபோன்ற சொகுசுப் பங்களாக்கள் வைத்துள்ளதால் இம்மாதிரியான வழக்குகள் பிரான்ஸ் நாட்டில் புதிதல்ல. ஆனால் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம் அழிவுப்பாதையில் உள்ளதை இம்மாதிரியான வழக்குகள் பிரதிபலிக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

Saint-Pierre-d'Oléron நகரபிதா கிறிஸ்தொப்சியர் கூறுகையில், இன்று சேவல் கூவும் சத்தம், நாளை கடற்பறவைகளின் சத்தம், அதன்பின் காற்றின் சத்தம்... ஏன் நாங்கள் பேசுவதையும் குற்றம் சொல்வார்களா என சாடியுள்ளார்.

2018ம் ஆண்டில், அதிகாலையில் கோயிலில் அடிக்கும் மணி ஓசை தொந்தரவாக இருப்பதாக சொகுசுப் பங்களாவிற்கு விடுமுறையைக் கொண்டாட வந்தவர்கள் புகார் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் நுழைய சமூக வலைதள விவரங்களை வழங்க வேண்டும்

அமெரிக்க நுழைவிசைவுக்கு (விசா) இனிமேல் விண்ணப்பம் செய்பவர்கள், தங்களின் சமூக வலைதள விவரங்களையும் தர வேண்டுமென புதிய விதிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு வரும் வெளிநாட்டினருக்கு விசா வழங்குவதில் புதிய விதிமுறை ஒன்றை அதிபர் டிரம்ப் நிர்வாகம் இணைத்துள்ளது. அதன்படி, இனிமேல் தற்காலிக நுழைவிசைவு உட்பட அனைத்து நுழைவிசைவு விண்ணப்பதாரர்களும் அவர்களின் சமூக வலைதள விபரங்களை வழங்கவேண்டும். தனிநபர் தகவல்கள் பிரிவில், இதற்கான புதிய குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. சமூக வலைதளத்தை பயன்படுத்தாதவர்கள், அவற்றில் கணக்கு இல்லை என்றும் குறிப்பிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் சமூக வரைத்தளங்களான பேஸ்புக், பிளிக்கர், கூகுள், இன்ஸ்டாகிராம், லிங்கெடின், யூ டியூப் போன்றவற்றின் செயல்பாடுகள் மூலம் விசாவுக்கு விண்ணப்பிக்கும் நபரின் 5 ஆண்டுகால வரலாறு ஆராயப்படும். இனி நுழைவிசைவு விண்ணப்பம் செய்வோர் தாங்கள் 5 ஆண்டுகளில் பயன்படுத்திய சமூக வலைத்தளங்களை பற்றி நுழைவிசைவு நேர்காணல் படிவத்தில் உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். இதில் தூதரக அதிகாரிகள் திருப்தி அடையவில்லை எனில் அவர்களுக்கு நுழைவிசைவு விண்

### நேட்டோவில் உக்ரேன்

நேட்டோ படையில் இணைவது தொடர்பாக உக்ரேனில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் 53 சதவீத மக்கள் நேட்டோ படையில் இணைவதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

### போதைக்கு எதிரான போர்

பிலிப்பைன்சில் போதை பழக்கத்துக்கு எதிரான போர் எனும் பெயரில் நடக்கும் சட்ட விரோத கொலைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், இதுதொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

### ஆப்கானில் 192 பாடசாலைகள் மீது தாக்குதல்

ஆப்கானிஸ்தானில் கடந்த வருடம் பாடசாலைகள் மீதான தாக்குதல்கள் பல மடங்கு அதிகரித்து காணப்பட்டது என தெரிவித்துள்ள யுனிசெவ் இதன் காரணமாக ஆப்கானிஸ்தானின் பல பகுதிகளில் மாணவர்களிற்கு உரிய கல்வியை உறுதிப்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் 2017ல் பாடசாலைகள் மீது 68 தாக்குதல்கள் இடம்பெற்றன என தெரிவித்துள்ள யுனிசெவ் 2018ல் 192 பாடசாலைகள் தாக்கப்பட்டன எனவும் தெரிவித்துள்ளது. அத்துடன், ஆப்கானிஸ்தானில் ஏழு வயது முதல் 17 வயதிற்குட்பட்ட 3.7 மில்லியன் மாணவர்கள் கல்வி வாய்ப்பில்லாத நிலையில் உள்ளனர் எனவும் யுனிசெவ் தெரிவித்துள்ளது.

### தென் சூடான் ஐ.நா. படை தளபதியாக இந்தியர்!

தென் சூடானுக்கான ஐ.நா. அமைதிப் படை தளபதியாக, இந்திய இராணுவ அதிகாரி சைலேஷ் தினேகரை ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் நியமித்துள்ளார். இது குறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது:



உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள தென் சூடானில், ஐ.நா. அமைதிப்படை நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் படையில் தளபதியாக இருந்து வரும் ருவாண்டா இராணுவ அதிகாரி ஃபிராங்க் கமான்ஸியின் பதவிக் காலம் கடந்த மே 26ம் திகதி நிறைவடைந்தது. இதனால் அந்தப் பதவிக்கு, இந்திய இராணுவ அதிகாரி சைலேஷ் தினேகரை ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் நியமித்துள்ளார். இதுகுறித்து ஐ.நா. செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சைலேஷ் தினேகர் இந்திய இராணுவத்தில் 34 ஆண்டுகளாக மிகச் சிறந்த சேவையாற்றியுள்ளார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய இராணுவ அகாதெமியில் 1983ம் ஆண்டு பட்டம் பெற்ற சைலேஷ் தினேகர், 1996, 1997ம் ஆண்டுகளில் அங்கோலாவிலும், 2008, 2009ம்

ஆண்டுகளில் சூடானிலும் ஐ.நா. அமைதிப் படையில் சேவையாற்றியுள்ளார். 57 வயதாகும் சைலேஷ் தினேகர் சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புட்டின் இரகசிய காதலிக்கு இரட்டைக் குழந்தைகள்

ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டினின் இரகசிய காதலி என கூறப்பட்டு வரும் அலினா காபேவாவுக்கு (36 வயது) இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன. ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற



ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலினா காபேவாவுக்கும் ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டினுக்கும் இரகசிய உறவு இருந்து வருவதாக பத்திரிகைகள் எழுதி வந்தன. ஆனால் இந்த தகவல்களை புட்டின் மறுத்து வந்துள்ளார். இந்நிலையில், மொஸ்கோவில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அலினாவுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன. இக் குழந்தைகளுக்கு புட்டினே தந்தை என்று உலகின் பல ஊடகங்களும் தெரிவித்துவருகின்றன. எனினும் இந்த விடயம் குறித்து ரஷ்ய ஊடகங்கள் வாய் திறக்கவில்லை. ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின் அலினா காபேவாவை விட 30 வயது மூத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஏற்கனவே திருமணமாகி கடந்த 2013ம் ஆண்டு விவாகரத்துப் பெற்றவர். இவருக்கு 34, 32 வயதில் இரு மகள்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருக்கலைப்பு கூலிப்படைக் கொலைக்கு சமம்

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் கருக்கலைப்புக்கு தடைவிதிக்கும் சட்டம் அண்மையில் நடைமுறைக்கு வந்தது. பெண் உரிமை ஆர்வலர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த சட்டத்தை நீக்கக்கோரி நீதிமன்றில் வழக்குள் தொடரப்பட்டுள்ளன. இந்த நிலையில், வாசிங்டன் நகரில் வத்திக்கான் சார்பில் கருக்கலைப்புக்கு எதிரான மாநாடு நடைபெற்றது. இதில் பொப் ஆண்டவர் பிரான்சிஸ் பேசினார். அப்போது அவர், கருக்கலைப்பு விவகாரம் ஒரு மதரீதியான பிரச்சினையல்ல, மாறாக மனிதாபிமான பிரச்சினை என்று கூறினார். மேலும், பிரச்சினையை தீர்க்க மனித உயிரை பறிப்பது சட்டப்பூர்வமானதா? என்று கேள்வி எழுப்பிய அவர், கருவில் உள்ள குழந்தையை அழிப்பது கூலிப் படையை ஏவி கொலை செய்வதற்கு சமம் என்று வேதனை தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், கரு சரியாக வளரவில்லை என்பதால் கருக்கலைப்பு செய்வதை ஏற்கமுடியாது. அது மனித நேயமற்ற செயல். மிகவும் பலவீனமான முறையில் பிறந்தாலும் பரவாயில்லை, குழந்தைகளை வரவேற்போம் என்றும் கூறியுள்ளார். ஆனால் இவரது இந்தக் கருத்துக்கு எதிர்ப்புக்கள் வலுத்துள்ளன.

ணப்பங்களை நிராகரிக்க உரிமை உண்டு. இந்த விதிமுறைகள் மாணவர் மற்றும் பயணிகள் விசாவுக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகள் கூறுகையில், இது முக்கியமான நடவடிக்கையாகும். தற்போதைய சூழலில், சமூக வலைதளமே தீவிரவாதிகளின் முக்கிய தகவல் பரிமாற்ற தளமாக உள்ளது. எனவே, சமூக வலைதளத்தை ஆய்வு செய்வதன் மூலம் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் மிக்க நபர்கள் அமெரிக்க மண்ணில் நுழைவதை தடுக்க முடியும். அதே சமயம், விசா விண்ணப்பிப்பவர்கள் சமூக வலைதள விவரத்தில் முறைகேடு செய்தாலோ தவறான தகவல் தந்தாலோ குடியேற்ற ரீதியாக கடும் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும், என எச்சரித்துள்ளனர். இந்த விதிமுறை கடந்த ஆண்டு வகுக்கப்பட்டு தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### ரஷ்யாவிடமிருந்து எஸ்-400

## அமெரிக்காவின் எதிர்ப்பிற்கும் மத்தியில் துருக்கி உறுதி

ரஷ்யாவிடமிருந்து அதிநவீன எஸ்-400 ரக வான்பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்குவதிலிருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று துருக்கி தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்நாட்டு அதிபர் எர்டோகன் கூறியதாவது, எஸ்-400 ஏவுகணைத் தொகுதிகளை வாங்குவதாக ரஷ்யாவுடன் நாங்கள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளோம். அந்த ஒப்பந்தத்தில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இதிலிருந்து துருக்கி பின்வாங்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார் அவர்.



2016ல், அதிபர் எர்டோகனின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாக துருக்கியால் குற்றம் சாட்டப்படும் ஃபெதுல்லா குலெனுக்கு அமெரிக்கா அடைக்கலம் அளித்துள்ளது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கும், துருக்கிக்கும் இடையே மோதல் நீடித்து வந்த சூழலில், அமெரிக்க எதிர்ப்பையும் மீறி ரஷ்யாவின் எஸ்-400 வான்பாதுகாப்பு ஏவுகணைகளை வாங்க அதிபர் எர்டோகன் முடிவு செய்தார். அதற்குப் பதிலடியாக, துருக்கிக்கு தனது அதிநவீன எஃப்-35 ரக போர் விமானங்களின் விற்பனையை அமெரிக்கா நிறுத்தி வைத்தது. இந்தச் சூழலில், அதிபர் எர்டோகன் இவ்வாறு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சீனா மற்றும் பாகிஸ்தானின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன எஸ்-400 ரக ஏவுகணைகளை இந்தியாவும் வாங்கவுள்ளது. கடந்த ஆண்டு ஒக்டோபரில் இருதரப்பு இடையே இதற்காக 40 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் ஒப்பந்தமும் கையெழுத்தானது. ரஷ்யாவிடம் இருந்து பாதுகாப்பு உபகரணங்களை வாங்கும் நாடுகள் மீது பொருளாதார தடை என அமெரிக்கா மிரட்டியது. இப்போது ரஷ்யாவிடம் இருந்து எஸ்-400 ரக ஏவுகணைகளை வாங்கும் திட்டத்தில் இந்தியா முன்னோக்கி நகர்ந்தால் இந்தியா - அமெரிக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அமெரிக்காவின்டிரம்ப் நிர்வாகம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

## தென் சீனக் கடலில் அமெரிக்கா - ரஷ்யா மோதும் நிலை!

கிழக்கு சீன கடல் பகுதியில் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்குச் சொந்தமான போர்க் கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் அளவுக்கு மிக அபாயகரமான நெருக்கத்தில் சென்றன. ஆயினும் இரு கப்பல்களும் மோதிக்கொள்ளும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

தங்களது கப்பல்களை பாதுகாப்பில்லாமல் செலுத்தி விபத்து நேரிடும் நிலைக்குக் கொண்டு சென்றதாக அமெரிக்கா மீது ரஷ்யாவும், ரஷ்யா மீது அமெரிக்காவும் குற்றம் சாட்டின. இதுகுறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது: தென் சீனக் கடலில் அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான யுஎஸ்எஸ் சான்ஸலர்வில் வெள்ளிக்கிழமை (7) ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. அப்போது, அந்தப் பகுதியில் அட்மிரல் வினோக்ரடோவ் போர்க் கப்பலும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தது. இந்த நிலையில், அந்த இரு கப்பல்களும் அபாயகரமான வகையில் வெறும் 50 மீற்றர் நெருக்கத்துக்கு வந்தன. எனினும், மாலுமிகளின் துரித நடவடிக்கையால் இரு கப்பல்களும் மோதி விபத்து ஏற்படுவது தவிர்க்கப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.


ரஷ்யாவே காரணம்!

தங்களது போர்க் கப்பல் ரஷ்யக் கப்பலுடன் மோதும் அபாயம் ஏற்பட்டதற்கு, ரஷ்ய கடற்படையினரின் பாதுகாப்பற்ற நடவடிக்கையே காரணம் என்று அமெரிக்கா குற்றம் சாட்டியது. இதுகுறித்து அமெரிக்காவின் 7வது கடற்படைப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், தென் சீனக் கடலில் எங்களது யுஎஸ்எஸ் சான்ஸர்வில் கப்பலில் ஓர் உலங்குவானூர்தி இறக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அப்போது அந்தக் கப்பலில் மோதும் வகையில் ரஷ்யப் போர்க் கப்பல் வேகமெடுத்து வந்தது. ரஷ்யாவின் இந்த நடவடிக்கை சர்வதேச கடல் பயண பாதுகாப்பு விதிமுறைகளுக்கு எதிரானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### அவுஸ்திரேலிய தமிழர் படுகொலை முயற்சி

# ஐ.எஸ். ஆதரவு பெண்ணுக்கு 42 ஆண்டுகள் சிறை

அவுஸ்திரேலியாவில் தமிழரை கத்தியால் குத்திய இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத ஆதரவு வங்கதேசப் பெண்ணுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 42 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது.



இதுகுறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது: வங்க தேசத்தைச் சேர்ந்த முமேனா ஷோமா (26 வயது – Momena Shoma) என்ற பெண், 2013ம் ஆண்டில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிரசாரங்களால் கவரப்பட்டு, அவர்களது ஆதரவாளராக மாறினார். அதையடுத்து, துருக்கி வழியாக சிரியாவிலுள்ள ஐ.எஸ். பகுதிக்குச் செல்லும் நோக்குடன், அந்த நாட்டில் கல்வி பயில்வதற்கான விசாவுக்கு முமேனா சோமா விண்ணப்பித்தார். எனினும், அவரது விண்ணப்பத்தை துருக்கி நிராகரித்தது. அதையடுத்து, மேலை நாடுகளில் தாக்குதல் நடத்துமாறு ஐ.எஸ். பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றுவதற்காக, அவர் அவுஸ்திரேலியாவில் கல்வி விசாவுக்கு விண்ணப்பித்தார். அவரது விசாவை ஏற்ற அவுஸ்திரேலிய அரசு, அவுஸ்திரேலிய குடும்பம் ஒன்றுடன் தங்கிப் படிக்க முமேனாவுக்கு அனுமதி அளித்தது.




ஐ.எஸ். உத்தரவுபடி அந்தக் குடும்பத்தினரை படுகொலை செய்ய திட்டமிட்ட முமேனா, அந்த வீட்டிலிருந்த தலையணையை கத்தியால் குத்தி அதற்காக ஒத்திகை பார்த்துள்ளார். அதனை கவனித்த அவுஸ்திரேலிய குடும்பத்தினர், அவரை வேறு வீட்டுக்கு மாற்றும்படி அதிகாரிகளிடம் கோரினர். அதையடுத்து, மலேசியாவிலிருந்து அவுஸ்திரேலியாவில் குடியேறிய ரோஜர் சிங்காரவேலு (Roger Singaravelu) என்ற தமிழர் வீட்டில் அவர் தங்க வைக்கப்பட்டார். மூன்று நாட்கள் கழித்து 17.04.2018 அன்று 56 வயதான சிங்காரவேலுவை அவரது ஐந்து வயதுக் குழந்தையின் முன்பாக முமேனா கத்தியால் குத்திக் கொல்ல முயன்றார். எனினும், இந்தத் தாக்குதலில் சிங்காரவேலு காயத்துடன் உயிர்பிழைத்தார். இந்த நிலையில், பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டதாக முமேனா மீது தொடரப்பட்ட வழக்கில் கடந்த வாரம் தீர்ப்பளித்த நீதிமன்றம், அவருக்கு 42 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்தத் தீர்ப்பை ரோஜர் சிங்காரவேலு வரவேற்றுள்ளார்.



# திபெத் சீனாவின் உள்நாட்டு விவகாரம்

# அமெரிக்க அறிவுரையை நிராகரித்தது சீனா

திபெத் பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு சீனாவுக்கான அமெரிக்கத் தூதர் டெரி பிரான்ஸ்டட் தெரிவித்த அறிவுரையை சீனா நிராகரித்தது. திபெத் விவகாரத்தில் அந்நிய நாடுகள் தலையிடுவதை அனுமதிக்க முடியாது என்பதால் அந்த அறிவுரையை ஏற்க முடியாது என்று சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் லு காங் தெரிவித்தார்.




இதுகுறித்து அவர் செவ்வாய்க் கிழமை கூறியதாவது: திபெத் பகுதிக்குச் சென்ற அமெரிக்கத் தூதர் டெரி பிரான்ஸ்டடிடம், அந்தப் பிராந்திய மக்களின் மதம் மற்றும் கலாசாரம் குறித்து எங்களது கொள்கைகளை சீன அதிகாரிகள் விளக்கமாக எடுத்துரைத்தனர். அத்துடன், திபெத் பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, திபெத்துக்குச் செல்ல வெளிநாட்டினரை அனுமதிப்பது போன்ற கொள்கைகளை சீனாதான் நிர்ணயிக்கும் என்பதை அவரிடம் அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

திபெத் விவகாரம் சீனாவின் உள்நாட்டு விவகாரம் ஆகும். அந்த விவகாரத்தில் மூன்றாம் தரப்பு வெளிநாடுகள் தலையிடுவதை சீனா ஒரு போதும் அனுமதிக்காது என்பதையும் அமெரிக்கத் தூதரிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தோம் என்றார் அவர்.

திபெத் பகுதிக்கு அமெரிக்க அதிகாரிகளை அனுமதிக்க மறுத்தால், அமெரிக்காவில் சீன அதிகாரிகளுக்கும் அதே போன்ற தடை விதிக்கும் சட்டத்தை அமெரிக்க கடந்த ஆண்டு இயற்றியது. அதன் விளைவாக, திபெத் பகுதியில் கடந்த 19 முதல் 25ம் திகதி வரை சுற்றுப் பயணம் செய்ய அமெரிக்கத் தூதர் டெரி பிரான்ஸ்டடுக்கு சீன அரசு அனுமதி வழங்கியது. அந்த சுற்றுப் பயணத்தின்போது, தலாய் லாமாவுடனோ, அவரது பிரதிநிதிகளுடனோ சீன அரசு பேச்சுவார்த்தை நடத்தி, திபெத் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்று டெரி பிரான்ஸ்டட் வலியுறுத்தினார். மேலும், திபெத்தி மத, கலாசார விவகாரங்களில் சீனா தலையிடுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சீன அரசு இவ்வாறு தெரிவித்துள்ளது.





## அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

கிழக்கு சீனக் கடல் பகுதியில் தங்கள் கப்பலுடன் மோதும் வகையில் அமெரிக்கப் போர்க் கப்பல்தான் திடீரென்று திசைமாறியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. இதுகுறித்து ரஷ்ய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்களது அட்மிரல் வினோக்ரடோவ் போர்க் கப்பல் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது, அமெரிக்காவுக்குச் சொந்தமான போர்க் கப்பல் அதனுடன் மோதும் வகையில் திடீரென திசை மாறியது.

மோதலைத் தவிர்ப்பதற்காக ரஷ்ய மாலுமிகள் உடனடியாக தங்களது கப்பலைத் திருப்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடல்நீர் மட்டம் 2100ம் ஆண்டுக்குள் 25 செ.மீ. உயரும்!

உலக வெப்பமயமாதல் காரணமாக பனிப்பாறைகள் தொடர்ந்து உருகி வருவதால், வரும் 2100ம் ஆண்டுக்குள் கடல்நீர் மட்டம் சுமார் 25 செ.மீ. உயரும் என ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் வடதுருவப் பகுதிக்கு அருகிலுள்ள கிரீன்லாந்து உள்ளிட்ட நாடுகளிலும் தென்துருவப் பகுதியான அண்டார்டிகாவிலும் அதிகளவிலான பனிப்பாறைகள் காணப்படுகின்றன. ஆனால், அதிகரித்து வரும் உலக வெப்பமயமாதல் காரணமாக பனிப்பாறைகள் உருகும் வேகமும் அதிகரித்து வருகிறது. இதனால், கடல்நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது. இது குறித்து, அமெரிக்காவின் நிறுவனம் ஒன்று ஆய்வு மேற்கொண்டது.

## மெக்சிகோ சுவர் - அமெரிக்க நீதிமன்றம் தடை

அகதிகள் வருகையை தடுக்கும் வகையில் மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்ட அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முடிவு செய்தார். இதற்கான நிதியை ஒதுக்கும்படி நாடாளுமன்றத்திடம் அவர் கோரிக்கை வைத்தபோது, ஜன நாயக கட்சியினர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டும் விவகாரத்தில் டிரம்ப், அவசர நிலையை பிரகடனம் செய்தார். இதன் மூலம் பாதுகாப்பு நிதியை மெக்சிகோ எல்லையில் சுவர் எழுப்ப அவர் பயன்படுத்த முடியும். அதன்படி எல்லை சுவர் திட்டத்துக்கு 1.5 பில்லியன் டொலரை நிதியாக ஒதுக்க அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகம் அண்மையில் ஒப்புதல் வழங்கியது.



இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமெரிக்க சிவில் உரிமைகள் ஒன்றியம் சார்பில் 20 மாகாணங்களின் மத்திய நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டன. இதில் கலிபோர்னியா மாகாணத்தில் மத்திய நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி மெக்சிகோ எல்லையில் சுவர் கட்டும் திட்டத்துக்கு பாதுகாப்பு நிதியை பயன்படுத்துவதற்கு தற்காலிக தடைவிதித்து உத்தரவிட்டார்.





கேரளா தலைமுடி ஆயுர்வேத தைலம்

குருஜி வைத்தியராஜு செல்:0758290550

- முடி உதிருதல்
- தலையில் பொடுகு
- தலையில் பேன்கடி
- தலைமுடி நரைத்தல்
- தலையில் சொட்டை
- தலையில் அதிக சூடு
- தலையில் அறிப்பு
- தலையில் தேமல்



100 % Cure

பென்களுக்கு மாதவிடாய் பிரச்சனையின் மூலம் முடி உதிருதல் போன்ற அனைத்து தலை முடி பிரச்சனைக்கும் 18 மூலிகையின் மூலம் தைலம் தயாரித்து தரப்படும்.

Drancy RERக்கு அருகாமையில்

**NOTICE**

I Sharmila Banu Marecar D/O SAMSUDEEN DOB 31/10/1981 residing at 11-13, Mail Victor Jarra, 93160 Noisy le Grand, shall henceforth be know as SHARMILA BANU SAMSUDEEN

Sharmila Banu MARECAR

**NOTICE**

I ANEESA FATHIMA D/O HABEEBULLAH SIDDIQ MOHIDEEN DOB 20/06/1980 residing at DOMAINE DES EPINETTES, 8 RUE BLAISE CENDRARS, 95140 GARGES LES GONESSE shall henceforth be know as ANEESA FATHIMA HABEEBULLAH SIDDIQ MOHIDEEN

ANEESA FATHIMA

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி



சித்த மருத்துவநிபுணர்
உயர்திரு எம்.ஏ.ஹுஸைன்
தமிழ்நாடு
(தமிழ்நாடு, மலேசியா பல் கலைக் கழகங்களில் பயிலும் M.Phil., M.Tech., PhD., மாணாக்கர்களுக்கு புறநிலை வழிகாட்டி Extenal Guide)

அன்பான தமிழ் உறவுகளே!

**“19ம் நூற்றாண்டில் வள்ளலார் ஆற்றிய தமிழ்த் தொண்டும் உயிர் காக்கும் சித்த மருத்துவமும்”** என்னும் தலைப்பில் வள்ளலார் வகுத்த சன்மார்க்க நெறியில் ஒழுகி அந்நெறியை 50 நாடுகளுக்கும் மேலாகச் சென்று தமிழையும், தமிழர்களின் பாரம்பரிய சித்த வைத்தியத்தையும் ஆன்ம நேயத்தையும் பரப்பிப் பணியாற்றி வரும் **சித்த மருத்துவ நிபுணர் திரு எம்.ஏ.ஹுஸைன்** அவர்கள் மீண்டும் பாரிசுக்கு வருகை தந்து சிறப்புரையாற்றுவார்கள். சொற்பொழிவு பிரெஞ்சு மொழியாக்கம் செய்வதால் இளையோர்களையும் அழைத்து வருமாறு வேண்டுகிறோம்.

காலம் : **16.06.2019 ஞாயிற்றுக்கிழமை**
காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
இடம் : **5 Allée de Savoie, Nanterre (92000)**
**RER A: Nanterre université (cassino முன்பாக)**
பிரவேசம் இலவசம். மதிய உணவு வழங்கப்படும்

தொடர்புகள்:
**இராமலிங்கர் பணி - மன்றம்** 06 13 35 62 87 - 06 27 56 27 78
**வள்ளலார் அருள்ஜோதி மணி - மன்றம்** 06 28 20 85 73 - 06 06 65 98 62

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
கொல்லா நெறியே குவலயமெல்லாம் ஓங்குக

# விண்வெளிப் போருக்கு...



எல்லாவற்றிற்கும் மேலாக இது 2022ம் ஆண்டில் போர் செய்ய தயாராக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதை அமெரிக்க புலனாய்விற்கு கிடைத்த மூன்று உளவுத்துறை தகவல்களுமே உறுதி செய்துள்ளன.

ரஷ்யாவின் செயற்கைகோள் எதிர்ப்பு ஆயுதமானது (Anti-Satellite Missile) ஒரு விண்வெளி வெளியீட்டு வாகனத்துடன் இணைக்கப்படும், பின் புவியின் குறைந்த சுற்று வட்டப்பாதையில் உள்ள, எதிரி நாடுகளின் தொடர்பு மற்றும் நிழற்படங்கள் எடுத்து அனுப்பும் செயற்கைகோள்களை இலக்காகக் கொண்டு உலாவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவின் சர்வதேச விண்வெளி நிலையம் மற்றும் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி ஆகியவைகள் பூமியின் குறைந்த சுற்று வட்டப்பாதையில் தான் பயணம் செய்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு 'மாற்றியமைக்கப்பட்ட ரஷ்ய மிக்–31 விமானம் ஆனது, சுப்பர்சொனிக் ஏவுகணைக்கு நிகரான ஒரு மர்மமான ஏவுகணையை சுமந்து செல்லும் படங்கள், கடந்த செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் வெளியானது. ஆக இதன் ஆரம்ப கால சோதனையானது செப்டம்பர் மாதம் முதல் வாரமே தொடங்கி இருக்கலாம் என்கிற ஒரு ஆதாரம். இதுவொரு விமான பயணத்தின் போது எவ்வாறு இருக்கும் போன்ற மதிப்பீடுகளை செய்யும் ஒரு சாதனையாகவும் இருக்கலாம் என்கிறது மற்றொரு ஆதாரம்.

இதன் அடுத்தக்கட்ட சோதனை ஆனது 2019ல் நடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அமெரிக்க புலனாய்வு அறிக்கையின், இந்த ஏவுகணை வருகிற 2022ம் ஆண்டில் ரஷ்ய ஆயுதக் களத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுசார்ந்த கேள்விக்கு விளக்கம் அளித்த ரஷ்ய அணுசக்தி படைகளின் இயக்குனர் பவெல் போட்விக், 'இது எனக்கு புரிகிறது, இது எனக்கும் தெரியும், இது ஒரு செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதமாக இருக்க சாத்தியக்கூறுகள் உள்ளது' என்று கூறியுள்ளார். மேலும் மொஸ்கோ இதற்கு முன்பு இது போன்ற அமைப்புகளில் பணியாற்றி உள்ளது என்றும் கூறியுள்ளார். 'இம்மாதிரியான ஒரு திறனை கொண்டு இருப்பது ரஷ்யாவிற்கு நல்லது தான்' என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே, சீனாவும் அமெரிக்காவும் இதே போன்ற ஆயுதங்களை உருவாக்கி வைத்துள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வெளியான நிழற்படங்களை பற்றி கருத்து கூறிய, ஏவுகணை பாதுகாப்பு திட்டத்தின் இயக்குனரான தோமஸ் கரோக்கோ. 'காற்றின் வழியாக தொடங்கப்படும் இயக்க–எதிர்ப்பு செயற்கைக்கோள் ஆயுதங்கள் நீண்ட காலமாக வளர்ச்சி அடைந்து கொண்டு தான் வருகின்றன. அது சீனா, அமெரிக்கா, தற்போது ரஷ்யாவால் நிரூபிக்கப்பட்டுள்ளன' என்று கூறியுள்ளார்.

செயற்கைக்கோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் எந்த வகையிலும் புதியவை அல்ல. விளாடுமீர் புட்டின், தனது நாட்டிற்கு வளர்ந்துவரும் இராணுவ ஆயுதங்களைப் பற்றி அறிவித்த பிறகு, எட்டு மாதங்களுக்குள் இந்த புதிய வெளிப்பாடு வந்துள்ளது என்றால் ரஷ்யா எவ்வளவு தீவீரமாக உழைக்க வேண்டும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. கடந்த 15 ஆண்டுகளாக ஆயுத தயாரிப்பில் ரஷ்யாவை முந்தும் முனைப்பின் கீழ் வேலை செய்த அனைவர்க்கும் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு எதிராக சட்டவிரோதமான தடைகளை அறிமுகப்படுத்திய உங்களால் ரஷ்யாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று விளாடுமீர் புட்டின் கடந்த மார்ச் மாதம் கூறி இருந்ததை மீண்டும் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறோம் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஏவுகணை உடன்படிக்கையை முறித்துக் கொண்டதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கடந்த சில மாதங்களின் முன்புதான் அறிவித்திருந்தார். ரஷ்யா – அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் தாங்கள் தயாரிக்கும் ஏவுகணைகளின் ஆற்றல் மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றை கட்டுப்பாட்டில் வைக்கும் வகையில் 1987ம் ஆண்டில் ஒரு உடன்படிக்கை (Intermediate-Range Nuclear Forces (INF) செய்து கொண்டன. அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் தலைவர் மிக்கல் கொப்பர்சேவும், அமெரிக்க அதிபர் றொனால்ட் றீகனும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இதன்படி, இரு நாடுகளும் நடுத்தர ரக அணு ஏவுகணைகளை தயாரிக்க கூடாது. அதாவது, அணு ஆயுத மோதலைத் தடுப்பதற்காக, அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லக் கூடிய தொலைதூர ஏவுகணைகளை அழிப்பதற்கும், புதிய ஏவுகணைகளைத் தயாரிக்காமல் இருப்பதற்கும் இந்த ஒப்பந்தம் வழியேற்படுத்திக் கொடுத்தது.

ஆனால், இந்த ஒப்பந்தத்துக்கு மதிப்பளிக்காமல் ரஷ்யா ஏவுகணைகளை தயாரித்து வருவதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வந்தது. இந்நிலையில், ரஷ்யாவிடம் உள்ள அத்துமீறலான ஏவுகணைகளை எல்லாம் அழிக்காவிட்டால் அந்நாட்டுடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இதுகுறித்து விடுத்திருந்த அறிக்கையில், ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஐஎன்எப் ஒப்பந்த விதிமுறைகளை அமெரிக்க கடந்த 30 ஆண்டுகளாக பின்பற்றி வருகிறது. ஆனால், ஒப்பந்தத்தை ரஷ்யா மீற வரும்போது, நாங்கள் அந்த ஒப்பந்தத்தை பின்பற்ற மாட்டோம்.

ரஷ்யா மீண்டும் இந்த ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி, தான் தயாரித்த நடுத்தர ரக அணு ஏவுகணைகளையும், லோஞ்சர்களையும் அழிக்காவிட்டால், ஐஎன்எப் ஒப்பந்த விதிமுறையை பின்பற்றுவதை நாங்களும் நிறுத்துவோம். இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் நடவடிக்கையை தொடங்கி விட்டோம். இன்னும் 6 மாதத்துக்குள் இந்த ஒப்பந்தம் முடிவுக்கு வரும்? என கூறியிருந்தார்.

இதனையடுத்து அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஏவுகணை உடன்படிக்கையை முறித்துக் கொண்டதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதிரடியாக அறிவித்தார். அமெரிக்கா இந்த உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக தெரிவித்துவிட்டதால் நாங்களும் இதில் எங்களது பங்களிப்பை விலக்கிக் கொள்கிறோம் என புட்டின் விளக்கமளித்தார். இந்நிலையில், தற்போது விண்வெளித் தாக்குதலுக்கான ஏவுகணையை ரஷ்யப் போர் விமானங்கள் சுமந்துகொண்டு திரிவது அமெரிக்க மட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## தியாகி பொன்.சிவகுமாரனின் 45வது..

*ஆனால் துரையப்பா வருவதற்கு முன்னரே குண்டு வெடித்துச் சிதறியது. இந்தத் தாக்குதலே ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் என்றும் கருதப்படுகிறது.*

*அதன் பின்னர் துரையப்பாவின் வாகனத்துக்கு குண்டு வைத்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்*



*பட்டு இரண்டு ஆண்டு காலம் சிறையிலே கழித்தார். சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் மீண்டும் அவர் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார். தனியே தாக்குதல் முயற்சி என்பதுமட்டும் அல்ல, குறிக்கோளை வைத்துக் கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுத்திக்கொண்டார். இளைஞர் பேரவை அப்போது நடத்திய உண்ணாவிரதம் போன்றவற்றில் பங்கேற்று மதியுரைகளை வழங்கிச் செல்வார்.*

*1973 இல் மாணவர் பேரவையின் பொறுப்பாளராக இருந்த சத்தியசீலன் போன்றவர்கள் கைதான காலகட்டம். அதற்கு முதலே சிவகுமாரன் கைதாகி, அநுராதபுரம் சிறையிலே அடைக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குகளும் நடைபெற்றன.*

*யாழ். தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளுக்குப் பின்னர், அப்படுகொலைக்கு உத்தரவிட்ட சந்திரசேகரவைக் கொல்ல வேண்டும் என்ற முடிவை எடுத்தவர் சிவகுமாரன். மாநாடு நடைபெற்ற 9 நாளும் தன்னை தொண்டராகப் பதிவு செய்து கொண்டு மாநாடு வெற்றிபெற வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தவர். அந்த நிலையில் மாநாட்டுக்கு குழப்பம் விளைவித்த சந்திரசேகரவை அங்கேயே கொல்ல வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறியவர். அதனாலேயே சிவகுமாரன் தேடப்பட்டார். சந்திரசேகரவைக் கொல்வதற்காக சிவகுமாரன் மேற்கொண்ட முயற்சி சூழ்நிலைகளால் தோல்வியடைந்தது.*


*உரும்பிராய் நடராஜா என்பவர் விடுதலைக்குப் போராடிய இளைஞர்களைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தவர். அவர்மீது தாக்குதல் நடத்துவதற்கு சிவகுமாரன் தலைமை ஏற்றார்.*

*இந்நிலையில், 5 யூன் 1974 அன்று கோப்பாயில் காவல்துறையினர் சிவகுமாரனைச் சுற்றிவளைத்தனர். அவர்களிடம் இருந்து தப்பித்து ஓடினார்.?ஆனால் ஒரு கட்டத்தில் தொடர்ந்து ஓட முடியாது நின்றபோது ஒரு காவல்துறையினன் சிவகுமாரனை தெருங்கிவிட்டார். ஆனாலும் துணிவோடு சிவகுமாரன் அவரது துப்பாக்கியை பறித்து அவரை சுட முயன்றார். அப்போது அந்த காவல்துறை உத்தியோகத்தர் தனக்கு மூன்று பிள்ளைகள். அவர்களின் தாயாரும் இறந்து விட்டார். தானும் இறந்தால் அவர்கள் மூவரும் அநாதைகள் ஆகிவிடுவார்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சினார். அதனால் அந்தக் காவல்துறையினனை சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை கடித்து தனது உயிரை மாய்த்துக்கொண்டார் சிவகுமாரன்.*

*வீழும்போதும் தான் விடுதலைக்காக போரிட மீண்டும் பிறப்பேன் என்று கூறியபடியே உயிரைவிட்டார். சிவகுமாரன் இறந்த பின்னர் அவரது கைக்கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டையில் இருந்த சிறிய தொகைப்பணம் என்பவற்றை அவரது தந்தையாரிடம் கையளித்து விட்டு 'உங்கள் மகன் தெய்வப்பிறவி. அவர் நினைத்திருந்தால் என்னை சுட்டுக் கொன்றிருக்கலாம்' எனக் கூறி சிவகுமாரனின் தந்தையின் காலில் விழுந்து வணங்கினாராம் அந்தக் காவல்துறை உத்தியோகத்தர்.*

*சிவகுமாரனின் இறப்பு இளைஞர்களிடத்திலே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. சுடுகாட்டுக்குப் பெண்கள் முதன் முதலில் வந்த நிகழ்வாக அது அமைந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் சிவகுமாரன் வீரச்சாவடைந்த நாளை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தினார்.*

## அரிச்சந்திரன் பதில்கள்




*மனதை இரும்பாக்கிக் கொண்டு ஆறாவது நாள் தன்னம்பிக்கை மிக்க முடிவொன்றை எடுத்தார். கையில் இருந்ததோ மழுங்கிப் போன ஒரு கத்தி. அதை வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்க் கையை வெட்டினார். வலி உயிர் போனது. இந்த வலியையும் பொறுத்துக்கொண்டு கை கொஞ்சம் கொஞ்சமாய் துண்டாகி விழ, அதில் இருந்து உயிர் தப்பினார். இன்று அவரது வாழ்க்கை தன்னம்பிக்கை தேடும் மனிதர்களுக்கான வழிகாட்டியாக இருக்கின்றது. இவரது தன்னம்பிக்கையும் துணிவையும் வெளிப்படுத்தும் விதமாக 127 மணிநேரம் (127 Hours) என்ற பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்டு உலகெங்கும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.*

## மரியாதை...

*அவர் வீட்டில் சங்கு ஊதியும், தாரை தம்பட்டை அடித்தும் எல்லோருக்கும் சொல்லியும் அனுப்பினார்கள். கிராம மக்கள் அனைவரும் ஆளுக்கு ஒரு கைத்தடியைத் தயார் செய்து ஓர் ஆள் மூலம் அனுப்பி அவர் வீட்டு வாசலில் வைத்து வரச் சொன்னார்கள். மேலும் கைத்தடிகளை, கிராமத்து ஆட்களாக நினைத்துக் கொள்ளும்படியும் கூறி அனுப்பினார்கள்.*

*செல்வந்தருக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது! தனது செயலுக்குத் தகுந்த தண்டனையாக அதைக் கருதினார். நாம் எதைச் செய்கிறோமோ அதையே மற்றவர்களும் நமக்குச் செய்வார்கள். எனவே எவ்வளவு பணமிருந்தாலும், செல்வாக்கு இருந்தாலும் மற்றவர்களை மதிக்காவிட்டால் மற்றவர்களும் நம்மை மதிக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்தார் அவர்! சிறிது நாட்களில் அவருக்கு உடல் நிலை தேறியது.*

*உடனே கிராம மக்களுக்கு ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதி அதனை ஒரு ஆள் மூலம் கிராமத் தலைவருக்கு அனுப்பினார் அவர்! திருந்திய அந்த செல்வந்தர் இப்போது அனைவருடன் சகசமாகப் பழகிக் கொண்டும், அனைவரிடமும் தனது அன்பைப் பரிமாறிக் கொண்டும் மகிழ்ச்சியாக இருக்கிறார்!*

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனைத்துலக தமிழ்மொழிப் பொதுத் தேர்வில் 27000 மாணவர்கள்!

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்ட அனைத்துலக மட்டத்தினாலான தமிழ்மொழிப் பொதுத் தேர்வு 2019 சிறப்பாக இடம்பெற்று முடிந்துள்ளது. இம்முறை 27000 மாணவர்கள் அனைத்துலக மட்டத்தில் தேர்வெழுதியுள்ளனர். தேர்வு பிரான்சு, இங்கிலாந்து, யேர்மன், டென்மார்க், நோர்வே, இத்தாலி, நெதர்லாந்து, சுவீடன், பெல்சியம், பின்லாந்து, நியுசிலாந்து, கனடா ஆகிய நாடுகளில் கடந்த 01.06.2019 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் முன்னெடுக்கப்படுகின்ற அனைத்துலகத் தேர்வு இம்முறையும் வழமை போல் சிறப்பாக நடாத்திய அனைத்துக் கல்விக் கழகங்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், தமிழர்கல்வி மேம்பாட்டுப் பேரவை தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.















தேர்வெழுதிய மாணவர்களை தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை சந்தித்தபோது

**வினாத்தாள்கள் எப்படி இருந்தன?**

இலகுவாக இருந்தன.

**எதற்காகத் தமிழ் கற்கின்றீர்கள்?**

எமது வரலாற்றை அறிய வேண்டும் .தமிழ் எங்கள் அடையாளம். தமிழ் எங்கள் தாய்மொழி. தாயகத்தில் உள்ள உறவுகளுடன் தமிழில் பேசவேண்டும். எம் மாவீரரின் விருப்பு நிறைவேற என்ற பல பதில்கள் எம்மாணவர்களிடமிருந்து வந்தன.

இதேவேளை,

பிரான்சின் பரிஸ் மற்றும் ஏனைய பிற மாவட்டங்களிலும் தமிழ்ச்சோலைத் தலைமை பணியகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தேர்வு நிலையங்களில் 6085 மாணவர்கள் தமிழ் மொழிப் பொதுத்தேர்வு எழுதியுள்ளனர். ஸ்ராஸ்பேர்க், நீஸ், துலுஸ், தூர், மூல்கவுஸ், றென், போ, நெவர் ஆகிய பிற மாவட்டங்களிலே தமிழ் மொழிப் பொதுத்தேர்வு இடம்பெற்றுள்ளது. இம்முறை பிரான்சில் கடும் வெப்பமான காலநிலை நிலவிய போதும், மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் தேர்வில் கலந்துகொண்டதைக் காணமுடிந்தது. பெற்றோர்கள் கடும் வெய்யிலுக்கு மத்தியில் காத்திருந்த காட்சி வெள்ளை இனத்தவர்களையும் ஆச்சரியப்படவைத்தது. வெளிநாட்டவர்கள் பலரும் குறித்த தேர்வுதொடர்பான விடயங்களைக் கேட்டுத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததையும் காணமுடிந்தது.




70 வருடங்களாக இலங்கையில் தொடரும் தமிழினவழிப்பு என்ற தலைப்பில் நோர்வே பாராளுமன்றத்தில் கருத்தரங்கு-நோர்வே ஈழத்தமிழர் அவை



Drancy நகரசபை முன்றலில் நடைபெற்ற கவனயீர்ப்பும் கண்காட்சியும்!

GLOBAL VISA POINT
இந்தியா. சிறீலங்கா. இங்கிலாந்து. சிங்கப்பூர் மற்றும் ஏனைய நாடுகளுக்கான விசாக்களை பெற்றுக்கொள்ள...
இந்தியாவில் நிர்வாக ரீதியான அனைத்து நடைமுறைகளுக்கும் உதவிட...
எம்மை நாடுங்கள்!
Tél: 09 50 00 12 35/07 53 16 86 86 07 55 99 33 99
25, rue Philippe de Girard, 75010 Paris



PARIS STYLE WEDDING PLANNER
உங்கள் மங்களகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும்
அழகிய மண்டபங்கள், புதிய மணவறைகள்
மற்றும் அறுசுவை உணவுவகைகள்
என அனைத்து சேவைகளும் ஒரேயிடத்தில்!
facebook like page: Paris style deco
Facebook: Thulasi Thulasitharan

உங்கள் அனைத்துப் பிரயாண ஒழுங்குகளிற்கும்
S.P.S TRAVELS
A. Benadict (Selva)
B. Prema
0091 98403 68935
0091 98406 31852
BOAT HOUSE GUEST HOUSE WEDDING ARRANGE
TRAVELS HOTEL ARRANGEMENT PARCEL SERVICE
Thiruvalluvar colony, 63th street, 10th sector, K.K.Nagar, Chennai - 68
Email : benadictselvaa@yahoo.in

La Courneuve மொழி பெயர்ப்புச் சேவை
சட்டபூர்வமானமொழிபெயர்ப்பு, Assermenté
மொழிபெயர்ப்பு சேவைகள் செய்து கொடுக்கப்படும்.
அரசாங்க அங்கிகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளர் (Français, Tamoul, Anglais)
திரு.கலாபல்லவன்
Email : t.kalapallavan@gmail.com
91, avenue Jean Jaurès, 93120 La Courneuve
Tél : 06 51 15 25 48 T1 Station DANTON (Dans le salon de coiffure)

மாலா மளிகை மலிவிற்கு மறுபெயர் மாலா
அனைத்து மளிகைப் பொருட்களும் ஒரே இடத்தில் - உயர் தரத்தில்
மாலா மார்க் 2Kg றால் 13€95
2Box நண்டு 10€95
2Kings மிளகாய்த்தூள் 11€90
2Kg றால் 10€99
60 Rue Louis Blanc, 75010 Paris
Tél : 01 40 34 42 49 M°: La Chapelle ou Gare du Nord

ரஜீன்தரா CASH AND CARRY
BOBIGNY வாழ் மக்களுக்காக...
மளிகை, இறைச்சி, ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல ...
Tel. : 09 87 03 70 07
1 Ave. Edouard Vaillant - 93000 Bobigny

Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

வீட்டு திருத்தவேலைகள்
உங்கள் வீட்டு திருத்த வேலைகள் அனைத்தும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 07 51 20 27 28

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
☛ எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

லா சப்பலில் சாரதி பயிற்சிநிலையம்
3i Conduite
CODE DE LA ROUTE பயிற்சி வகுப்புகள்
CONDUITE பயிற்சி வகுப்புகள்
CONDUITE EXAM அனுமதி பெற்றுத்தரப்படும்
57 RUE LOUIS BLANC - 75010 PARIS
SRUTHI STUDIO வின் உள்புறம்
Tél : 06 51 38 87 33

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

Rapid Emballages
உங்கள் உணவகம், இல்லம் மற்றும் மண்டப நிகழ்வுகளுக்கான உபயோகப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள...
1 Bis rue du chemin vert, 93800 Epinay sur Seine
Tel : 0158340422 / 0616812200

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்லம், மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS
TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55 M°: STALINGRAD / LA CHAPELLE

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE 93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

பிரான்சின் ஏக விநியோகஸ்தர்கள் ...
SKYROSE
YUPPTV
14, RUE CAIL - 75010 PARIS
01 77 17 63 58
M° Gare du Nord / La Chapelle

SUTHAGINY SASU
Drancy RERக்கு அருகாமையில்
மளிகைப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
குளிர்பானங்கள்
11, Rue Morin, 93700 Drancy
Tél: 09 51 24 37 70

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost, 93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சஞ்சிகைகள், நாவல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.